# வானவில்

# VAANAVIL

இதழ் 179 | கார்த்திகை 2025

ISSUE 179 | November 2025


# தொழிற்சங்க இயக்கத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும்



உலகம் முழுவதும் உள்ள தொழிற்சங்கங்களின் நோக்கம் இரண்டு வகைப்பட்டது.

ஒன்று, தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே இருக்கின்ற உரிமைகளைப் பாதுகாப்பது.
இரண்டாவது, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய மேலதிக உரிமைகளுக்காகப் போராடுவது.

இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல.

எல்லா நாடுகளையும் போலவே இலங்கையிலும் இடதுசாரிக் கட்சிகளே தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடிகள்.

இலங்கையில் முதன்முதலில் அமைப்பு ரீதியாக தொழிற்சங்கங்களில் அணி திரண்டவர்கள் மோட்டார் வண்டி அறிமுகமாகாத அந்தக் காலத்தில் மாட்டு வண்டில் வைத்துச் செயல்பட்ட வண்டிக்காரர்களே என ஒரு கருத்தும், அச்சுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே முதலில் தொழிற்சங்கத்தில் அணி திரண்டவர்கள் என்ற இன்னொரு கருத்தும் இருக்கின்றது.

எது எப்படியிருந்த போதிலும், ஆசிய நாடுகளில் முதன் முதலாக தொழிற்சங்க அமைப்புகளில் அணி திரண்டவர்கள் என்ற பெருமை இலங்கைத் தொழிலாளர்களுக்கு உண்டு.

1935இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியும், அதே நேரத்தில் இடதுசாரிக் கட்சியுமான லங்கா சமசமாஜக் கட்சியே முதன் முதலாக தொழிற்சங்கங்களை இலங்கையில் அமைத்தது. பின்னர் 1943இல் உருவான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அதற்கு இணையான தொழிற்சங்க அமைப்பு வேலைகளில் ஈடுபட்டது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சி நிலவிய அந்தக்கால இலங்கையில் அவர்களது அடக்குமுறை ஆட்சியின் கீழ் தொழிலாளர்களுக்கு எவ்வித உரிமைகளும் இருக்கவில்லை. அதனால் அவர்களுக்கு தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும் இருக்கவில்லை.

இத்தகைய ஒரு கடினமான சூழலிலேயே இடதுசாரி கட்சிகள் பெரும் நெருக்கடிகள் மத்தியில் இலங்கையில் தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டியெழுப்பினர். நெருக்கடிகள் இருந்த போதிலும், எதிர்நீச்சல் அடித்து பலமான ஒரு தொழிற்சங்க இயக்கத்தை இலங்கையில் கட்டியெழுப்புவதில் அவர்கள் வெற்றி பெற்றனர்.

அவ்வாறான ஒரு தொழிற்சங்க இயக்கத்தின் மூலமே 1947இல் (இலங்கை சுதந்திரம் அடைவதற்கு ஒரு வருடம் முன்னதாக) பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கெதிராக மாபெரும் பொது வேலைநிறுத்தம் ஒன்றையும் இடதுசாரிக் கட்சிகள் முன்னெடுத்தன.

அந்த வேலைநிறுத்தத்தை பிரித்தானிய காலனித்துவ அரசு தனது பொலிஸ் படையை ஏவி அடக்குமுறையின் மூலம் முறியடித்தாலும், மறுபக்கத்தில் அதன் நடவடிக்கை தொழிலாளர்கள் மத்தியில் மேலும் பரந்த பலமான ஒற்றுமைக்கு வழிவகுத்தது.

இந்த மகத்தான போராட்டத்தின் போதுதான் யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி என்ற அரச ஊழியர் காலனித்துவப் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகித் தியாகியானார். இந்தத் தியாகம் அன்றைய இலங்கையில் இன பேதங்களுக்கு அப்பால் இருந்த வர்க்க ஒற்றுமைக்கு ஒரு சான்றாகும்.

இத்தகைய போராட்டங்களின் தாக்கத்தால், 1948இல் பிரித்தானியர் பெயரளவிலான சுதந்திரத்தை இலங்கைக்கு வழங்கிவிட்டு வெளியேறினாலும், சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைத்த டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஏகாதிபத்திய சார்பு – பிற்போக்கு ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) அரசாங்கத்தின் கீழும் அதே காலனித்துவ கால நிலைமைகள் அப்படியே தொடர்ந்தன.

அதனால் அந்த ஆட்சியின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக 1953 ஓகஸ்ட் 12ஆம் திகதி மாபெரும் ஹர்த்தால் போராட்ட நடவடிக்கையை இடதுசாரித் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டன. அந்தப் போராட்டத்தின்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# வடபகுதி இனச்சுத்திகரிப்பு நிகழ்ந்து 35 வருடங்கள்

**க**டந்த ஒக்ரோபர் மாதம் 30ந திகதி வடபகுதி முஸ்லீம் மக்களுக்கு எதிராக புலிகளால் நிகழ்த்தப்பட்ட இனச்சுத்திகரிப்பின் 35 வது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது. இலங்கையின் எந்த ஒரு குடிமகனும் அவரது இன அடையாளம் காரணமாக வீட்டிலிருந்து ஒருபோதும் விரட்டப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கு 1990 ஒக்ரோபர் இனச்சுத்திகரிப்பை இலங்கையின் சகல சமூகங்களும் நினைவுகூருவது மிக அவசியம். ஆனால் மாவீரர் தினத்தையும், இதற்கு சரியாக 5 வருடங்களுக்குப் பின்னர் புலிகளின் அச்சுறுத்தலின் பேரில் பல இலட்சம் யாழ் குடாநாட்டு மக்கள் வெளியேற்றப்பட்டதை, இராணுவ முற்றுகைக்கு அஞ்சி வெளியேறியதாகவும் நினைவுகூர்ந்து வருபவர்களுக்கு இந்த இனச்சுத்திகரிப்பு நினைவுக்கு வருவதில்லை.

வடபகுதி முஸ்லீம்களின் வெளியேற்றப்பட்ட தினமாக ஒக்ரோபர் 30 என பரவலாகச் சொல்லப்படுகின்ற போதிலும் ஒக்ரோபர் 15ந திகதியே சாவச்சேரியில் வாழ்ந்த முஸ்லீம்களை வெளியேறுமாறு புலிகள் ஆணை பிறப்பித்துள்ளதாக சொல்லப்படுகின்றது. அதன் பின்னர் கிளிநொச்சி மற்றும் மன்னாரிலும் வாழ்ந்த முஸ்லீம்களை வெளியேறுமாறு உத்தரவிட்டு, ஒக்ரோபர் 30ந திகதியே யாழ் குடாநாட்டு முஸ்லீம்கள் மீது புலிகள் கைவைத்தனர்.

ஒக்ரோபர் 30, 1990 அன்றைய தினம், முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பகுதி யாழ் நகரின் சோனகத் தெருவைச் சுற்றி வளைத்த புலிகள், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒருவர் உடனடியாக ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானத்திற்கு வர வேண்டுமெனக் கட்டளையிட்டனர். புலிகளின் உத்தரவிற்கு இணங்க ஜின்னா மைதானத்தில் வருகைதந்த முஸ்லீம் மக்களின் முன்னே தோன்றிய புலிகளைச் சேர்ந்த இளம்பரிதி (அப்போது ஆஞ்சநேயர் என்று அழைக்கப்பட்டான்) என்பவன், ''நீங்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தை விட்டு உடனடியாக இன்னும் 2 மணித்தியாலங்களில் வெளியேற வேண்டும். இது எமது தலைவரின் உத்தரவு. தமிழீழத்தில் நீங்கள் உழைத்தவை எல்லாம் தமிழீழத்திற்கே சொந்தம். எனவே உங்கள் சொத்துக்கள் அனைத்தையும் இங்கே விட்டு விட்டு நீங்கள் உடனே வெளியேறுங்கள்'' என்று கர்ச்சித்தான்.

இலங்கைத் தமிழ் மக்களின் கலாசார தலைநகரமென வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணத்தில் பல தசாப்தங்களாக வாழ்ந்த முஸ்லீம் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற இரண்டு மணித்தியாலங்கள் அவகாசம் மட்டுமே வழங்கப்பட்டது. அவர்கள் தங்களுடன் 500 ரூபா பணமும் சில ஆடைகள் மற்றும் உடமைகளை மட்டுமே எடுத்துச் செல்ல முடியும் என்று கூறப்பட்டது. புலிகளின் கட்டளைக்கு இணங்க வெளியேறிய முஸ்லீம்கள் புலிகளின் சோதனைச் சாவடிகளைக் கடந்தபோது, புலிகள் அவர்களை சோதனையிட்டு 500 ரூபாவிற்கு அதிகமாக எடுத்துச் செல்லப்பட்ட பணம், நகைகள், கைக்கடிகாரங்கள் மற்றும் சொத்துக்களுக்கான பத்திரங்களை பறிமுதல் செய்தனர். முஸ்லீம் பெண்கள் தங்கள் கழுத்து மற்றும் காதுகளில் அணிந்திருந்த தங்க நகைகளை பிடுங்கி எடுத்தார்கள்.

பல முஸ்லிம் வர்த்தகர்கள் மற்றும் முஸ்லிம் நகை வியாபாரிகள் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டு, சொத்துக்களை எங்கே மறைத்துவிட்டு செல்கின்றீர்களென அவர்களை துன்புறுத்தி விசாரித்தார்கள். பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை விடுவிப்பதற்கு புலிகளால் பெருந்தொகைப் பணம் கோரப்பட்டது. அவ்வாறு கடத்தப்பட்டவர்களில் பலர் புலிகள் கேட்ட பணத்தைக் கொடுத்து வெளியே வந்தனர். அதேவேளையில் இன்னும் பலரை புலிகள் விடுவிக்கவில்லை. அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

யாழ் குடாநாட்டு முஸ்லிம்கள் தங்கள் வீடுகளில் விட்டுச்சென்ற சகல உடைமைகளையும் புலிகள் எடுத்துச் சென்றனர். பல வீடுகளின் கூரை ஓடுகள், கதவுகள், ஜன்னல்கள் மற்றும் நிலைகள் கூட புலிகள் கழற்றி எடுத்தார்கள். பின்னர் அவற்றில் பெரும்பாலானவற்றை 'மக்கள் கடைகள்' என்று அழைக்கப்பட்ட புலிகளின் கடைகளின் ஊடாக தமிழர்களுக்கு விற்கப்பட்டன.

முஸ்லிம்களை வெளியேற்றியதை புலிகள் நியாயப்படுத்தியதோடு, அவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைத்து வருதற்கு எதிரான ஒரு தண்டனை நடவடிக்கை என்று பகிரங்கமாக கூறிக்கொண்டனர். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் இருந்து சுமார் 20,000 பேரும், முல்லைத்தீவில் இருந்து 5,000 பேரும், வவுனியாவிலிருந்து 9,000 பேரும், மன்னாரில் இருந்து 38,000 பேருமாக ஏறத்தாள 72,000 முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களில் பெரும்பான்மையினர் புத்தளம் மாவட்டத்தில் தற்காலிக முகாம்களில் குடியேறினர். வேறு பலர் வவுனியா, நீர்கொழும்பு, கொழும்பு உட்பட இலங்கையில் முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களில் குடியேறினர். மேலும் ஒரு பகுதியினர் வெளிநாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

யுத்தம் முடிந்து 16 வருடங்களின் பின்னரும் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் தங்கள் சொந்த இடங்களில் இன்னும் முழுமையாக மீளக்குடியேறவில்லை. அவர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் பலரது நிலங்களும் கைமாறிவிட்டன. அத்தோடு மீளவும் குடியேறுவது என்பது புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதாகும். எனவே வாழ்வாதாரத்திற்கான உத்தரவாதம் இருந்தால் மாத்திரமே அவர்களால் மீளக்குடியேற முடியும்.

தமிழ் தேசியவாதத்தின் பெயரில் புலிகள் செய்த சகல மனித உரிமை மீறல்களையும் போர்க்குற்றங்களையும் மூடி மறைப்பதில் பெரும்பான்மையான தமிழ் சமூகம் இன்னும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ் சமூகம் மாத்திரமே பாதிக்கப்பட்டு வருகின்றது என்பதே இதற்கு இவர்கள் கூறும் காரணம். இன ஒடுக்குமுறைக்கு எதிராகத் தூக்கிய ஆயுதத்தைப் பாவித்து புலிகள் சகல சமூகத்தையும் வேட்டையாடினார்கள் என்பது இவர்களுக்கு ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை.

புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் செய்த குற்றங்களுக்கு பொறுப்புக்கூற எவருமில்லையென எல்லாவற்றையும் ஒருபோதும் கடந்து போக முடியாது. முள்ளிவாய்க்காலில் இனவழிப்பு நடந்ததென கூறுவதற்கு வருடாவருடம் ஜெனிவாவிற்கு படையெடுப்பவர்களும் ஊடகங்களில் கதையளப்பவர்களும் புலிகள் புரிந்த குற்றங்கள் தொடர்பில் தொடர்ந்தும் மௌனம் சாதிக்க முடியாது. இலங்கையில் வாழும் தமிழ் சமூகம் உட்பட ஒவ்வொரு சமூகமும் தங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே, இலங்கையில் சகல சமூகங்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# ரோகண விஜேவீரவின் மனைவி சொல்லும் கதை!





**“இன்று புதிதாக அனுர குமாரவை ஆதரிக்கத் தொடங்கிய முட்டாள்களிடம் போய் சொல்லுங்கள், அவர்களின் தலைவர் விஜேவீரவின் புகைப்படத்தைத் தவிர அவர்களிடம் வேறெந்த கொள்கையுமில்லை. கேவலம் தங்கள் தலைவரின் குடும்பத்துக்கு மக்கள் கொடுத்த நிதியைக்கூட ஆட்டையைப் போட்ட அரசியல்வாதிகள்தான் இன்று அரசாங்கத்தை நடாத்தும் ஜே.வி.பியினர் என்று”**

**– திருமதி சித்திராங்கனி விஜேவீர**

அரசியல் புரட்சியாளரும், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) நிறுவனருமான ரோகண விஜேவீரவின் மனைவி சித்தாரங்கனி விஜேவீர வெலிசறை கடற்படை முகாமில் உள்ள தங்கள் வீட்டை 2015 ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்குள் அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு இலங்கை கடற்படையிடமிருந்து விஜேவீர குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்ட செய்தி பரவியதைத் தொடர்ந்து, அந்த நாட்களில் தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்தார்.

சுமார் 26 ஆண்டுகளுக்குப் பிறகு ஊடகங்களிடம் பேசிய திருமதி விஜேவீர, வாழ்வதற்கான தனது போராட்டம், கட்சி தன்னை எவ்வாறு நடத்தியது மற்றும் தற்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தான் என்ன கோருகிறார் என்பதை ஊடகங்களிடம் வெளிப்படுத்தினார்.

அப்போது ‘டெயிலி மிரர்’ பத்திரிகைக்கு அவர் கொடுத்த பேட்டியின் ஒரு பகுதியே இது:

**கேள்வி:** நீங்கள் வெலிசர கடற்படை முகாமில் எவ்வளவு காலமாக வசித்து வருகிறீர்கள்?

**பதில்:** நாங்கள் முதலில் கணேமுல்ல முகாமில் வசித்து வந்தோம். பின்னர் திரிகோணமலை கடற்படை முகாமுக்கு மாற்றப்பட்டோம். 1999 முதல் வெலிசர கடற்படை முகாமில் வசித்து வருகின்றோம்.

**கேள்வி:** இத்தனை வருடங்களுக்குப் பிறகு நீங்கள் ஏன் பேச ஆரம்பித்தீர்கள்?

**பதில்:** முதலில் என்மீது சுமத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுகளையும், சில தரப்பினரால் பரப்பப்பட்ட தவறான தகவல்களையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க வெளியிட்ட அறிக்கையில் எனது 3 குழந்தைகள் வெளிநாட்டில் இருப்பதாகவும், அவர்களில் இருவர் பொறியியலாளர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை என்னவென்றால், எனது மகன் ரஸ்யாவில் இருக்கிறார். எனது குடும்பத்தில் பொறியியலாளர்கள் எவரும் இல்லை. எனது மற்ற 5 குழந்தைகள் இலங்கையில் உள்ளனர். சிலர் இதை சேறு பூசும் பிரச்சாரங்களுக்கு வாய்ப்பாக மாற்றியுள்ளனர். ஆனால் அதைச் எங்களுக்குச் செய்ய வேண்டாம் என்று நான் அவர்களை கடுமையாக வலியுறுத்துகின்றேன். எனது குழந்தைகள் நிறைய கஸ்டங்களை எதிர்கொண்டுள்ளனர். விஜேவீரவின் குழந்தைகள் என்று அடையாளம் காணப்பட்ட பிறகு, ஆசிரியர்கள் அவர்களை ஒரு சிங்கள பிரபாகரனின் குழந்தைகள் போல நடத்தினர்.

விஜேவீரவின் வாழ்க்கை, அவர் எப்படி ஒரு கொலைகாரன், திருடன் ஆனார் மற்றும் அவரது மனிதாபிமானம் அற்ற வன்முறைச் செயல்கள் பற்றி அவர்கள் தொடர்ந்து கூறுவார்கள். விஜேவீர அவற்றைச் செய்திருந்தால், என்னையோ என் குழந்தைகளையோ அல்ல, அவரைத்தான் தண்டிக்க வேண்டும். ஒரு புரட்சியாளர் மற்றும் ஒரு கொலைகாரனின் குழந்தைகளை வேலைக்கு அமர்த்த நிறுவனங்கள் விரும்பாததால், அவர்கள் இன்றுவரை வேலையில்லாமல் உள்ளனர்.

**கேள்வி:** உங்கள் குடும்பத்தை கட்சி எப்படி நடத்தியது?

**பதில்:** ஜே.வி.பி. எங்கள் குடும்பத்தை நன்றாக நடத்தவில்லை. நான் 1995 அல்லது 1996 நடுப்பகுதியில் டில்வின் சில்வா மற்றும் நிஹால் கலப்பதி ஆகியோரைச் சந்தித்து எங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புமாறு வலியுறுத்தினேன். அவர்கள் எங்களை அனுப்பக்கூடிய தகுதியில் இருந்தனர். ஆனால் எங்கள் கோரிக்கைக்கு அவர்கள் பதிலளிக்கவில்லை.

நாங்கள் கொழும்புக்கு வந்த 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கைக்கு திரும்பிய சோமவன்ச அமரவன்சவிடமும் அதே கோரிக்கையை முன்வைத்தேன். விஜித ஹேரத் ஒரு அறிக்கையையும் வெளியிட்டார். அதில் கடற்படை பல சந்தர்ப்பங்களில் எங்களை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னதாகக் கூறினார். ஆனால் 2008ஆம் ஆண்டில் ஒருமுறை மட்டுமே நாங்கள் வெளியேறச் சொல்லப்பட்டோம்.

**கேள்வி:** 2008 இல் என்ன நடந்தது?

**பதில்:** முதலில் எங்களை வீட்டை விட்டு வெளியேறச் சொன்ன போது, நான் டில்வின் சில்வா, சோமவன்ச ஆகியோரைச் சந்தித்தேன். அப்போது நாங்கள் நிதி ரீதியாக நல்ல நிலையில் இல்லை. எனது நிலைமையைப் பற்றி நான் அவர்களிடம் சொன்ன போது, சோமவன்ச எங்களுக்கு ஒரு வீடு தருவதாகக் கூறி, பிட்ட கோட்டேயில் உள்ள ஒரு இடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார். அவர் ஒரு வீட்டைக் காட்டி அதனைத்

தருவதாகக் கூறினார். அந்த நாட்களில் நான் உபதிஸ்ஸ கமநாயக்கவின் மனைவி திருமதி கருணா கமநாயக்கவுடன் தொடர்பில் இருந்தேன். வீடு இல்லாமல் என் குடும்பத்துடன் நான் எவ்வளவு சிரமப்படுகிறேன் என்பதை அவர் கண்டார்.

ஒரு வீடு வாங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டதாகவும், ஆனால் எப்போது கிடைக்கும் என்று தெரியவில்லை என்றும் அவர் என்னிடம் கூறினார். அதன் பிறகு எனது அவலநிலை குறித்து ஜே.வி.பியின் இலண்டன் கிளையில் அவரே புகார் அளித்தார்.

**கேள்வி:** அடுத்து என்ன நடந்தது?

**பதில்:** சில நாட்களுக்குப் பிறகு திரு. அமரசிங்க இதைப்பற்றி அறிந்திருந்தார். அவர் என்னை தொலைபேசியில் திட்டினார். அவரது அனுமதியின்றி நான் எந்த அறிக்கையும் வெளியிடக்கூடாது என்று என்னை அவர் மிரட்டினார். சத்தியமாக எனக்கும் லண்டன் கிளைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நான் தொடர்பு வைத்திருந்தால் இன்று இப்படி கஸ்டப்பட்டிருக்க மாட்டேன். இந்தச் சம்பவத்தால் அவர்கள் எனக்கு கொடுப்பதாக உறுதியளித்த வீட்டைக் கொடுக்கவில்லை. அவர்கள் ஒருபோதும் எங்கள் நலனுக்காகப் பேசவில்லை.

அப்போதுதான் அப்போதைய ஜனாதிபதியிடம் சென்று எனது நிலைமையைப் பற்றிச் சொன்னேன். அதனால் அந்த அரசாங்கத்தினால் எங்களுக்கு ஒரு நல்ல விடயம் செய்தார்கள். அது என்னவென்றால், அவர்கள் எங்களை வெளியேற்றவில்லை.

**கேள்வி:** அதாவது, வீட்டை விட்டு வெளியேறும்படி கேட்பது இது இரண்டாவது முறையா?

**பதில்:** ஆம், அந்த அறிவிற்பிற்குப் பிறகு, பெப்ருவரி 2015இல் எங்களுக்கு இரண்டாவது அறிவிப்பு வந்தது. மீண்டும் நான் டில்வின் சில்வாவை அழைத்து, எங்களை வெளியேறும்படி கேட்டதாகக் கூறினேன். அவர் தன்னிடம் பணம் இல்லை என்று கூறினார். பின்னர் நான் அவரிடம் அனுர குமார திசாநாயக்கவின் எண்ணைக் கேட்டேன். ஆனால் அவர் அதை எனக்குக் கொடுக்கவில்லை.

ஆனால் பின்னர் நான் அனுர குமார திசாநாயக்கவின் நம்பரைக் கண்டுபிடித்து, அவரிடம் கதையைச் சொன்னேன். அவர் கேட்டுக்கொண்டே போனை வைத்துவிட்டார். நான் அவருக்கு மீண்டும் மீண்டும் போன் செய்து வருகிறேன். ஆனால் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ஒரு கட்சியாக, நிறுவனர் என் கணவருக்கான மரியாதையாக குறைந்தபட்சம் எங்களுக்கு ஒரு வீட்டைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.

**கேள்வி:** அவர்கள் எப்போதாவது பதிலளிப்பார்கள் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** இப்போது அவர்கள் குற்ற உணர்ச்சியுடன் ஊடகங்களுக்கு எல்லா வகையான கதைகளையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். விஜேவீர 60,000 பேரின் உயிரைப் பறித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் கட்சி விசாரணைக்கு அழைப்பு விடுத்ததா? கொல்லப்பட்ட 60,000 பேரின் குடும்பங்களுக்கு நீதி வழங்க கட்சி தவறினால், அவர்கள் எங்கள் குடும்பத்திற்கு எவ்வாறு நீதி வழங்குவார்கள்?

**கேள்வி:** உங்கள் குடும்பத்திற்கு கட்சி கொடுத்ததாகச் சொல்லும் ரூ.10 மில்லியன் தொகை கதை என்ன?

**பதில்:** இனிமேல் ஜே.வி.பியுடன் எனக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. ஏனெனில், அவர்கள் தங்கள் கடமைகளில் தவறிவிட்டனர். விஜேவீரவின் பல ஆதரவாளர்கள் எங்கள் குடும்ப நலனுக்காக பணம் அனுப்பினார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் கட்சி அந்தப் பணத்தை வைத்திருக்கிறது. மேலும், நாங்கள் அவர்களின் தாளத்திற்கு ஆட வேண்டும் என்று விரும்புகிறது.

சோமவன்ச ரூ.10 மில்லியன் தொகையைப் பற்றியும் குறிப்பிட்டார். இந்தப் பணம் எங்கே என்று கட்சிக்கோ அல்லது எனக்கோ தெரியாது.

விஜேவீரவின் வாழ்க்கை குறித்து எழுதப்பட்ட புத்தகங்கள் உள்ளன. அவருடைய மனைவியாக அவை எனக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும். ஆனால் கட்சி அவற்றை விற்று பணம் சேகரிக்கிறது.

**கேள்வி:** உங்கள் அன்றாடச் செலவுகளை நீங்கள் எவ்வாறு சமாளிக்கிறீர்கள்?

**பதில்:** எங்களுக்கு அரசாங்கத்தால் ஒரு வீடு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகின்றோம்.

(ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசாநாயக்க மற்றும் அதன் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா ஆகியோரைத் தொடர்பு கொள்ள எடுத்த பல முயற்சிகள் பலனளிக்கவில்லை.
இது 10 வருடங்களுக்கு முன்னர் 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வெளிவந்த பேட்டியின் சில பகுதிகளாகும்)

## கியூபாவுக்கு ஆதரவாக 165 நாடுகள் ஐ.நாவில் வாக்களித்துள்ளன!

**கி**யூப சோசலிசக் குடியரசு மீது அமெரிக்கா 65 ஆண்டுகளாகத் தொடரும் பொருளாதார – வர்த்தக – நிதித் தடைகளை நீக்கக்கோரி 29.10.2025 அன்று ஐ.நா. பொதுச்சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு 165 உறுப்பு நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

வழமைபோல அமெரிக்காவின் கடுமையான அழுத்தங்கள் இருந்த போதிலும் 193 உறுப்பு நாடுகள் கொண்ட ஐ.நா. சபையில் 165 நாடுகள் கியூபாவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. அதேநேரத்தில் வழக்கமாக தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்கும் அமெரிக்கா, இஸ்ரேல், ஆர்ஜென்ரீனா, உக்ரைன், ஹங்கேரி, பராகுவே, வடக்கு மசடோனியா ஆகிய 7 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன.

ஐ. நாவுக்கான அமெரிக்க தூதுவர் தமது நாடு கியூபாவுக்கு எதிரான தடைகளை விதித்து வருவதை நியாயப்படுத்தி பொய்யான 10 காரணங்களை பொதுச்சபையில் முன்வைத்த போதும், உறுப்பு நாடுகள் அவரது சப்பை கட்டுதலை ஏற்கவில்லை. அவரது பொய்க் காரணங்களை சபையில் பேசிய கியூப வெளிவிவகார அமைச்சர் அக்கு வேறு ஆணி வேறாகக் கிழித்தெறிந்தார்.

அமெரிக்கத் தடையால் கியூபாவுக்கு ஏற்பட்ட சேதங்களையும் இழப்புகளையும் அவர் போதிய புள்ளிவிபரங்களுடன் உறுப்பு நாடுகளின் முன்வைத்தார்.

தொடர்ச்சியாக 33ஆவது ஆண்டாக கியூபாவுக்கு ஆதரவான இந்தத் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட போதும், அமெரிக்கா அடாவடித்தனமாக சின்னஞ்சிறு கியூபாவுக்கு எதிரான தடைகளைத் தொடர்ந்து வருகிறது. அதேநேரத்தில் இப்படியான அராஜக நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டு மற்றைய நாடுகளில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகத் தான் போராடி வருவதாகவும் பசப்பி வருகிறது.

# அயர்லாந்து ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரி ஆதரவு வேட்பாளர் அமோக வெற்றி!



அயர்லாந்தில் ஒக்ரோபர் 24 அன்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், முற்போக்கு சிந்தனையாளரான சுயேச்சை அரசியல்வாதி கத்தரின் கொனோலி (Catherine Connolly) மாபெரும் வெற்றி பெற்றுள்ளார். அவர் சுமார் 64 சதவீத வாக்குகளைப் பெற்று, பழமைவாத வேட்பாளரான ஹீதர் ஹம்ப்ரீஸை (Heather Humphreys) விடப் பெரிய வித்தியாசத்தில் வென்றார். இவரது வெற்றியானது, ஐரோப்பிய நாடுகளில் உள்ள இடதுசாரி மற்றும் முற்போக்கு அரசியலுக்குப் புதிய உத்வேகத்தை அளிப்பதாகவும், தீவிர வலதுசாரிக் கொள்கைகளுக்கு ஒரு பின்னடைவாகவும் பார்க்கப்படுகிறது.

பிரதான ஊடகங்கள் அவர் மீது களங்கம் கற்பிக்க முயன்றபோதிலும், அவரது வெற்றி, மக்கள் அவர்மீது வைத்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியது.

தற்போது ஆளும் கூட்டணியாக உள்ள பிற்போக்குப் பழமைவாதக் கட்சிகளான ஃபியானா ஃபைல் (Fianna Fáil) மற்றும் ஃபைன் கேல் (Fine Gael) கட்சிகளை வீழ்த்துவதற்காக, அந்நாட்டிலுள்ள முக்கிய இடதுசாரி மற்றும் முற்போக்குக் கட்சிகள் அனைத்தும் கத்தரினுக்கு ஆதரவு தெரிவித்து, ஒரே கூட்டணியாக இணைந்ததே இந்த வரலாற்று வெற்றிக்குக் காரணம்.

குடியரசு மற்றும் ஜனநாயக சோசலிச அரசியல் கட்சியான சின் ஃபின் (Sinn Féin) தலைவர் மேரி லூ மெக்டொனால்ட் (Mary Lou McDonald) கூறுகையில், "இது அயர்லாந்து அரசியலில் ஒரு திருப்புமுனையாக இருக்கும். ஆளும் கட்சிகளை வீழ்த்த அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றாக நின்றோம்" என்றார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், சர்வதேச அரங்கில் காஸா இனப்படுகொலை உள்ளிட்ட முக்கியப் பிரச்சனைகள் குறித்து தொடர்ந்து குரல் கொடுப்பேன் என்று கத்தரின் உறுதியளித்தார். "இனப்படுகொலையை சாதாரணமாகப் பார்ப்பது மனித குலத்திற்கே பேரழிவை ஏற்படுத்தும். என் மூச்சுள்ள வரை நான் பலஸ்தீன மக்களுக்குத் துணையாக நிற்பேன்" என்றும் அவர் வாக்குறுதி அளித்திருந்தார். அயர்லாந்து மக்கள் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகப் போராடி வரும் நிலையில், கத்தரின் கொனோலியின் இந்த நிலைப்பாடு அவருக்குக் கூடுதல் ஆதரவைப் பெற்றுத் தந்துள்ளது.

மேலும், அயர்லாந்தின் வெளியுறவுக் கொள்கையான நடுநிலைமைக்கு அவர் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறார். ஐரோப்பிய ஒன்றியம் தனது அதிகாரத்தை ஆயுதம் உற்பத்தி செய்கிற பெருநிறுவனங்களுக்காக அல்லாமல், மக்களின் வாழ்க்கையை செழுமைப்படுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும், நேட்டோ இராணுவக் கூட்டமைப்பு உத்தரவின்படி ஐரோப்பாவின் இராணுவமயமாக்கல் மற்றும் அதிகப்படியான ஆயுதச் செலவுகளுக்கு எதிராகவும் அவர் குரலெழுப்பி வருகிறார்.

பிரித்தானியா நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெர்மி கோர்பின் (Jeremy Corbyn) மற்றும் ஸாரா சுல்தானா (Zarah Sultana) உள்ளிட்டவர்களும் சர்வதேச அளவிலான இடதுசாரிக் கட்சித் தலைவர்களும் கத்தரின் கொனோலிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## அயர்லாந்து வெற்றியின் வரலாறு

***- விஜய் பிரசாத்***

கத்தரின் கொனொலி (1957) 1999 இல் தான் தீவிர அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். பதவியிலிருந்து வெளியேறும் தற்போதைய ஜனாதிபதி மைக்கேல் டி.ஹிக்கின்ஸ் கோனொலியை தொழிலாளர் கட்சியில் சேர்த்து தேர்தலில் நிற்க வைத்தார். இருவரும் அயர்லாந்தின் மேற்குக் கடற்கரையில் உள்ள கால்வே நகரத்தைச் சேர்ந்தவர்கள்.

கத்தரின் ஒரு தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த ஒன்பதாவது குழந்தை. தகப்பன் ஒரு வீடு கட்டும் தொழிலாளி. தாயார் கத்தரினின் ஒன்பதாவது வயதில் இறந்து விட்டார்.

கத்தரின் இளம் வயதில் கத்தோலிக்க தொண்டு நிறுவனங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். இது அவரது சோசலிச உணர்வு வளர்வதற்கு காரணமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

1999 இல் வழக்கறிஞரான அவர் கால்வே நகர சபைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் கால்வே நகரின் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டு 2004 முதல் 2005 வரை பணியாற்றினார். அதற்கு முதல் மைக்கேல் 1990 முதல் 1991 வரை முதல்வராக இருந்தார். கேத்தரின் அப்பொழுது மைக்கேலைப் பின்

தொடர்ந்தது போல இப்பொழுதும் பின் தொடர்ந்து அயர்லாந்தின் ஜனாதிபதியாகி உள்ளார்.

அயர்லாந்து பிரித்தானிய காலனித்துவத்தால் பிரிக்கப்பட்ட ஒரு நாடு. பெரும்பாலான மக்கள் அயர்லாந்து குடியரசில் வாழ்கின்றனர். (மக்கள் தொகை 5.2 மில்லியன்) அதே நேரத்தில் தீவின் மக்கள் தொகையில் ஒரு பகுதியினர் பிரித்தானியாவால் கட்டுப்படுத்தப்படும் வடக்கு மாவட்டங்களில் வாழ்கின்றனர் (மக்கள் தொகை 1.5 மில்லியன்) உலகெங்கிலும் சுமார் 80 மில்லியன் ஐரிஸ் மக்கள் வாழ்கின்றனர். (ஐரிஸ் மக்கள் மத்தியில் பிரபலமான நபராக சே குவேரா இருக்கிறார்)

அயர்லாந்து ஜனாதிபதி பதவி ஒரு சம்பிரதாயபூர்வமான பதவியாகவே இருக்கின்றது. முன்னைய ஒன்பது ஜனாதிபதிகளும் இந்தப் பதவியை அயர்லாந்து முழுவதற்கும் பேசுவதற்கான ஒரு பிரசங்க மேடையாக வடிவமைத்துள்ளனர்.

கவிஞரும் அரசியல்வாதியுமான மைக்கேல் டி ஹிக்கின்ஸ் (Michael D Higgins), இந்தப் பதவியை மாற்றியுள்ளார். உலகில் அயர்லாந்தின் பங்கை அங்கீகரிக்கும் வகையில் அதை வடிவமைத்துள்ளார். இத்தகைய பதவியில் புதிய ஜனாதிபதி கத்தரின் கொனொலி மகிழ்ச்சியுடன் பணியாற்ற முடியும். கத்தரின் கொனொலி மற்றும் மைக்கேல் டி இருவரும் இடதுசாரிச் சிந்தனையுள்ளவர்கள்.

அயர்லாந்து மக்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான தமது போராட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் முன் வைக்கப்படும் கடும் சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

26 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட வீட்டு வசதி நெருக்கடி காரணமாகவே தான் முதன்முதலில் அரசியலில் நுழைந்ததாக கொனொலி கூறுகிறார். அயர்லாந்தில் உள்ள இளைஞர்களுக்கு இது முக்கிய பிரச்சினையாக உள்ளது. அவர்களில் பலருக்கு தாங்கள் வேலை செய்யும் இடங்களுக்கு அருகில் நல்ல தங்குமிடத்தை வாடகைக்கு எடுப்பது சாத்தியமில்லை.

1990களில் நிதி தாராளமயமாக்கல் மூலம் அயர்லாந்தின் பொருளாதாரம் செழித்தது. இதனால் நாடு “செல்டிக் ரைகர்” (Celtic Tiger) என்ற புனைபெயரால் அழைக்கப்பட்டது.

2008 கடன் நெருக்கடிக்குப் பிறகு செல்டிக் ரைகரின் வீழ்ச்சி இருந்தபோதிலும் அயர்லாந்து சரிந்து விடவில்லை. நாடு கால் மில்லியன் யூனிற் வீட்டுப் பற்றாக்குறையைச் சந்திக்கிறது என்றும், தலைநகர் டப்ளினில் ஓர் ஆசிரியர் தனது முழுச் சம்பளத்தையும் ஒரு சாதாரண அடுக்குமாடி குடியிருப்பிற்கான வாடகையாகச் செலுத்த வேண்டியுள்ளது என்றும், 2012 மற்றும் 2022 இற்கு இடையில் சம்பளம் 27 சதவீதமாக உயர்ந்தாலும் சொத்து விலைகள் 75 சதவீதம் அதிகரித்தன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் கொனொலி தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது, ஐரிஸ் மக்கள் எதிர்கொள்ளும் நேரடிப் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தினார். ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும் இந்தப் பிரச்சினைகளைப் பொதுவெளியில் விவாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

2014 ஆம் ஆண்டு ஜனாதிபதி மாளிகையில் மைக்கேல் டி – யை நான் சந்தித்தபோது, மனித வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் போர் நடவடிக்கைகளில் மனித வளங்கள் வீணடிக்கப்படுவதைக் கண்டு அவர் மிகவும் வேதனைப்பட்டார்.

ஐரிஸ் நடுநிலைமைப் பிரச்சினை மற்றும் கால்வேக்கு மிக அருகில் உள்ள ஸானான் விமான நிலையத்தில் அமெரிக்க போர் விமானங்கள் மற்றும் சீ.ஐ.ஏ. விமானங்கள் என்பனவற்றை தரையிறக்க அனுமதித்ததின் மூலம் அயர்லாந்து நடுநிலைமைக் கொள்கையிலிருந்து வழுகியமை என்பன குறித்து நாங்கள் விவாதித்தோம்.

கொனொலி இதே கவலையுடன்தான் மைக்கேல் டி – யை பின்தொடர்ந்து ஜனாதிபதி அலுவலகத்துக்குள் வருவார். அமெரிக்காவின் போர் நடவடிக்கைகளுக்கு எதிராக மட்டுமின்றி, பலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலிய இனப்படுகொலைக்கு எதிராகவும் அவர் முக்கியமான அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். யூன் மாதத்தில் கொனொலி இஸ்ரேலை ஒரு “பயங்கரவாத நாடு” என அழைத்தார். டப்ளினில் இருந்து இது போன்ற அறிக்கைகள் தொடர்ந்து வெளியிடப்படும் என்று தெரிகிறது.

1932 ஆம் ஆண்டு குடியரசுக் கட்சி (ஃபியானா ஃபைல்) தலைவரான எமொன் டி வலேரா பிரதமர் பதவியை வென்றதிலிருந்து நாட்டை குடியரசுக் கட்சி மற்றும் ஐரிஸ் கட்சி (ஃபைன் கேல்) என்பன முன்னும் பின்னுமாக வழிநடத்தி வருகின்றன. இந்த இரண்டு வலதுசாரிக் கட்சிகளும் அமெரிக்க உயரடுக்கினருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவை.

கொனொலி ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீனமாகப் போட்டியிட்ட போதிலும், பரந்த இடதுசாரிச் சக்திகளால் ஆதரிக்கப்பட்டார். 100 சதவீத ரெட்ரஸ், அயர்லாந்து கம்யூனிஸ்ட் கட்சி, பசுமைக் கட்சி, தொழிலாளர் கட்சி, இலாபத்திற்கு முன் மக்கள், சின் ஃபைன், சமூக ஜனநாயகக் கட்சி என்பனவும் பல வெகுஜன அமைப்புகளும் தேர்தலில் அவரை ஆதரித்தன.

இவற்றில் நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியான சின் ஃபைனின் ஆதரவு மிக முக்கியமானது. அயர்லாந்தை ஒன்றிணைப்பதில் கவனம் செலுத்தும் குடியரசுக் கட்சியின் பாரம்பரியத்தையும், நகரங்களில் தொழிலாள வர்க்கத்தின் அடித்தளத்தையும் அக்கட்சி கொண்டுள்ளது.

கொனொலி முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறியிருந்தாலும், அவர் பெரும்பாலும் தொழிலாள வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக இருப்பார், ஐரிஸ் நில உடமையாளர்கள் மற்றும் வங்கியாளர்களின் குரலாக இருக்கமாட்டார். அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் அதன் கூட்டாளிகளிடம் கருணை காட்ட மாட்டார்.

(விஜய் பிரசாத் ஒரு இந்திய வரலாற்றாசிரியரும் பத்திரிகையாளரும் ஆவார். பல நிறுவனங்களில் அவர் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கிறார். 20 இற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார்)

---

மார்க்சின் தத்துவம் ஒரு முழுமையான பொருள்முதல்வாத தத்துவமாகும். இது மனிதகுலத்திற்கு குறிப்பாக தொழிலாளி வர்க்கத்திற்கு மிக வலிமையான அறிவை ஆயுதமாக வழங்குகின்றது.

**– லெனின்**

# பர்சிலோனா விரிவுரை: 2009 இல் ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு கிடைத்த வெற்றி குறித்து

இந்த ஆண்டு இலங்கை பற்றிய ஐ.நா. மனித உரிமைப் பேரவை விவாதம் மீண்டும் எழுச்சி பெற்றுள்ள நிலையில், 2009இல் ஜெனீவாவில் இலங்கை பெற்ற தீர்க்கமான வெற்றி பற்றி எதிர்க்கட்சித் தலைவர், சஜித் பிரேமதாசா நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

2009 இல் பெற்ற வெற்றி குறித்து விளக்குமாறு எவரும் என்னிடம் கேட்கவில்லையாயினும், அது சர்வதேச புலமைவாய்ந்த ஊடகங்களில் போதுமான அளவு இடம் பெற்றுள்ளது.

பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளுக்கான இலங்கையின் தூதுவராக நான் பணியாற்றிய போது, ஸ்பெயினின் புகழ்பெற்ற பர்சிலோனா (Barcelona) சர்வதேச உறவுகள் நிறுவனம் (IBEI), 2009ஆண்டு வெற்றியின் மூன்றாம் ஆண்டு நிறைவான மே 2012 இல் ஒரு சொற்பொழிவாற்ற என்னை அழைத்தது. எனது சொற்பொழிவுக்கு முதுகலைத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளரும், IBEI இல் பேராசிரியர் ஹாலிடேயின் முன்னாள் மாணவரும், IBEI இல் அவரது வாரிசுமான பேராசிரியர் றொபேர்ட் கிசாக் தலைமை தாங்கினார்.

எனது சொற்பொழிவின் உரையை இலங்கை ஊடகங்களில் வெளியிடுவது பொருத்தமானது என நான் நினைத்தேன். ஏனெனில், அது வெற்றி பெற்ற உத்தியின் சூழல் மற்றும் கருத்தியல் அடித்தளங்களை மீண்டும் உருவாக்குகிறது.

**பர்சிலோனா விரிவுரை, மே 24 2012**

எனது இளம் வயதிலேயே எனது அறிவுசார் நாயகர்களில் ஒருவரான பேராசிரியர் பிரெட் ஹாலிடே இங்கு (பர்சிலோனா) பல ஆண்டுகள் கழித்தார். என்னை அழைத்து இந்த சொற்பொழிவுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் றொபேர்ட் கிசாக் அவரது சீடராகவும் சக ஊழியராகவும் இருந்தார் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் ஒரு தொழில்முறை ராஜதந்திரி அல்ல. ஆனால் என் விடயத்தில் ஒரு தொழில்முறை ராஜதந்திரி என்பதை விட, ஒரு ராஜதந்திரியாக நான் செய்ததிற்கும், செய்யாததிற்கும் நான் அதிகம் பொறுப்பானவன் என்று



அர்த்தம். வழக்கமான போலி வார்த்தைகளைப் பயன்படுத்தி நான் உத்தரவுகளைப் பின்பற்றுகிறேன் என்று சொல்ல முடியாது. எனவே, நீங்கள் கேட்கக்கூடிய கேள்விகள் மற்றும் விமர்சனங்களுக்கு நான் மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவனாக இருந்தேன். ஏனென்றால், நான் ஒரு கல்வியாளராகவும், முன்னாள் அரசியல் ஆர்வலராகவும் தினமும் இந்தப் பிரச்சினைகளுடன் போராடுகின்றேன்.

ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு அல்லது செயல்முறையில் ஒருவர் முன்னணிப் பங்காற்றியதைப் பற்றி விவாதிக்கும் போது, புறநிலைத்தன்மையின் சோதனையைச் சந்திப்பது போன்ற கடினமான விடயங்கள் வேறு எதுவுமில்லை.

**கலாநிதி தயான் ஜெயதிலக**

முற்றிலும் பக்கச்சார்பான இனப்பிரச்சாரத்திற்கு வெளியே, இலங்கைப் போர் மற்றும் இலங்கை அரசின் நடத்தை பற்றிய மிகவும் தீவிரமான எதிர்மறையான பதிவு, கோர்டன் வெய்சின் "தி கேஜ்" என்ற நூலாகும். இது திடமாக ஆராயப்பட்டு, நன்கு எழுதப்பட்டு புத்திசாலித்தனமானதும் படிக்கக்கூடியதானதுமான புத்தகமாகும்.

இந்த நூல் மோதலின் இறுதிக் கட்டங்களின் சர்வதேச மற்றும் ராஜதந்திர பரிமாணத்தைப் பற்றிய 30 பக்கங்கள் கொண்ட ஒரு முழு அத்தியாயத்தைக் கொண்டுள்ளது. (அத்தியாயம் 9: "தி வோர்ச்சிங் வேர்ல்ட்") இது ராஜதந்திரம் ஒரு முக்கியமான போராட்டக்களமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

நியுயோர்க் மற்றும் ஜெனீவா ஆகிய இரண்டு அரங்குகளில் ஐ.நாவில் வெய்ஸ் கவனம் செலுத்துகிறார். அவர் நியுயோர்க்கின் நிலைமையை பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்:

"நிலைமை விரிவடைந்தவுடன் சீனா, ரஸ்யா மற்றும் இந்தியாவின் நிலைப்பாடுகள் தெளிவாகின. இலங்கை தனது படைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு சபையில் எந்தத் தீர்மானமும் வராது. சீனாவும் ரஸ்யாவும் பிரிவினைவாத இயக்கங்கள் சம்பந்தமான எந்தவொரு தீர்மானத்தையும் வீட்டோ செய்யும். இந்தியா, இலங்கைத் தாக்குதலை புத்திசாலித்தனமாக ஊக்குவித்தது. எனினும், பொதுமக்கள் உயிரிழப்புகளைக் குறைக்க வலியுறுத்தியது. ஆனால் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட ஐந்து நாடுகளில் சீனாதான் மிகப்பெரிய தடையாக இருந்தது". (பக்கம்.139–140)

"நியுயோர்க்கில் உள்ள ஐ.நா. அரங்குகளில், பாதுகாப்பு சபையின் சுழற்சி இடங்களில் ஒன்றைக் கொண்ட மெக்சிக்கோ, இலங்கையை நிகழ்ச்சி நிரலில் முறைப்படி வைக்க முயன்றது. அதற்கான ஆதரவில் மேற்கத்தைய மற்றும் ஜனநாயக நாடுகள் அணி வகுத்திருந்தாலும், இலங்கையின் நடவடிக்கைகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகளை சீனா தடுக்கும் என்பது விரைவில் தெளிவாகியது… செல்வாக்கு மிக்க பாதுகாப்பு சபையின் தீர்மானத்துக்கான சாத்தியம் வெகு தொலைவில் இருந்தது. இலங்கை தனது சீனத் துரும்பைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி வெற்றி பெற்றது". (பக்கம். 200–201)

இவ்வாறாக நியுயோர்க் ஐ.நாவில், இலங்கை கட்டமைப்பு ரீதியாக மிகப் பாதுகாப்பாக இருந்தது. மேலும் வெய்ஸின் நூலில் அந்த நேரத்தில் ஐ.நாவில் இருந்த இலங்கை ராஜதந்திரிகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவரது நூலில் ஐ.நாவின் ஜெனீவா மிகவும் வித்தியாசமாக குறிப்பிடப்படுகிறது:

"மே 27 அன்று ஜெனிவாவில் உள்ள பலாய்ஸ் டெஸ் நேசன்ஸில் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை போரில் ஈடுபட்ட இரு தரப்பினரின் நடத்தை

குறித்து சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுத்தார். ஐரோப்பிய ஒன்றியமும் வேறு சில நாடுகளும் பிள்ளையின் அழைப்பை ஆதரித்து ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தாலும், பெரும்பாலான நாடுகள் அதை உடனடியாக நிராகரித்தன. அதற்குப் பதிலாக, புலிகளுக்கு எதிரான வெற்றிக்காக இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டி, இலங்கை அரசாங்கம் முன்வைத்த மாற்றுத் தீர்மானத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்". (பக்கம்.229)

தனது இறுதி அத்தியாயத்தில் வெய்ஸ் எனது பங்கை இவ்வாறு விவரிக்கிறார்:

"ராஜபக்ச ஆட்சியால் நியமிக்கப்பட்ட மிகவும் திறமையான ராஜதந்திரிகளில் ஒருவரான தயான் ஜெயதிலக ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கண்டனத்திலிருந்து இலங்கை தப்பிக்க உதவுவதற்காக மேற்கத்தைய ராஜதந்திரிகளைக் காட்டிலும் திறமையில் மிஞ்சினார்". (பக்கம்.256)

அவரது குறிப்புகளில் அவர் இந்த மதிப்பீட்டை வழங்குகிறார்:

"இலங்கை அரசாங்க பிரதிநிதிகளில் மிகவும் தெளிவாகப் பேசியவர் ஜெயதிலக" (பக்கம்.330)

ஜெனீவா 2009இன் புறநிலை புரிதல் பற்றிய சர்வதேச உறவுகளை ஆராயும் மாணவர்களுக்கு கோர்டன் வெய்ஸ் மட்டுமே கிடைக்கக்கூடிய ஒரே முக்கியமான ஆதாரம் அல்ல. அவற்றில் ஜெனீவாவிற்கும் வொசிங்டனுக்கும் இடையிலான கேபிள் பரிவர்த்தனைகளில் சில விக்கிலீக்ஸிலும் உள்ளன. இதுமட்டுமல்லாமல், பிரான்சில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் இராஜதந்திர தொடர்பாடல்களில் இருந்தும், அமெரிக்க தூதர் சூசன் ரைஸூக்கும் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் நவி பிள்ளைக்கும் இடையிலான உரையாடல்களில் இருந்தும் கூட அவற்றை அறிந்து கொள்ளலாம்.

சர்வதேச விருது பெற்ற இந்திய பத்திரிகையாளரும், எழுத்தாளருமான நிருபமா சுப்பிரமணியன் 2009 ஜெனீவா கூட்டம் பற்றிக் கூறிய கருத்து பின்வருமாறு:

"கடந்த மாதம் (2009) ஐ.நா. சபையின் மனித உரிமை பேரவை தீர்மானத்தை இலங்கை யோசித்துக் கொண்டிருந்த போது, 2009ஆம் ஆண்டு ஜெனீவாவில் அதன் வெற்றியை அது ஏக்கத்துடன் திரும்பிப் பார்த்திருக்கக்கூடும். பின்னர் புலிகளுக்கு எதிரான வெற்றியின் ஒரு வாரத்திற்குப் பிறகு, மேற்கத்தைய நாடுகளின் ஒரு குழு, போர் நடவடிக்கையின் கடைசிக் கட்டங்களில் இராணுவத்தால் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கும், ஏனைய உரிமை மீறல்களுக்கும் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று விரும்பியது. பொதுமக்களை மனிதாபிமானத்துடன் கையாள்வதற்காக அரசாங்கத்தைப் பாராட்டி, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அதன் திறன்களில் நம்பிக்கையை வலியுறுத்திய ஒரு தீர்மானத்தின் மூலமாக, போர்க்களத்தில் இரத்தம் இன்னும் காய்ந்து போகாத நிலையில், இலங்கை இராஜதந்திர தோல்வி விளிம்பிலிருந்து வெற்றியைப் பறிக்க முடிந்தது." (தி இந்து)

மிகவும் சுவாரஸ்யமானது என்னவென்றால், மே 2009 சிறப்பு அமர்வு உட்பட ஐ.நா. மன்றங்களில், நடந்து முடிந்த, போர்களின் ஆழமான பரிமாணத்தையும், பரந்த விளைவுகளையும் பற்றிய மிகவும் பரந்த ஒரு கட்டுரை உள்ளது. இந்தக் கட்டுரை இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நடந்த விதிமுறைகள் மீதான மோதலைப் பற்றியும், இலங்கை ராஜதந்திரிகள் 'நெறிமுறை தொழில்முனைவோரின்' பங்கைக் கொண்டிருந்தனர் என்பதையும் பற்றிப் பேசுகிறது.

'தாராளவாத அமைதியின் தோல்வி: உலகளாவிய பார்வையில் இலங்கையின் கிளர்ச்சி எதிர்ப்பு' என்ற தலைப்பில் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி அறிஞர் டேவிட் லூயிஸ் ஓர் ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தார். பிராட்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் அமைதி ஆய்வுகள் துறையில் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு மையத்தில் லூயிஸ் சிரேஸ்ட ஆராய்ச்சி உறுப்பினராக இருக்கிறார். மேலும், 2006 – 7 ஆண்டுகளில் சர்வதேச நெருக்கடி குழுவின் இலங்கைத் திட்டத்திற்கு தலைமைதாங்கியும் உள்ளார். அவர் எழுதுகிறார்:

"மோதல் தொடர்பான விதிமுறைகள் குறித்து, இலங்கைக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் பல வாக்குவாதங்கள் ஐ.நா. நிறுவனங்களில், பிரதானமாக மனித உரிமைகள் பேரவையில் நடந்தன. பொதுவாக இந்த இராஜதந்திரப் மோதல்களில் இலங்கைதான் சிறந்து விளங்கியது..."

"இந்த சர்ச்சைக்குரிய செயல்முறை மாறிவரும் அதிகார உறவுகளையும், சீனா, ரஸ்யா மற்றும் பிற 'உயரும் சக்திகளின்' அதிகரித்து வரும் செல்வாக்கைப் பிரதிபலிக்கிறது என்றாலும், சிறிய நாடுகள் வெறுமனே மற்றவர்களால் உருவாக்கப்பட்ட மற்றும் போட்டியிடும் விதிமுறைகளைப் பெறுபவர்கள் என்று அர்த்தமல்ல. உண்மையில், இலங்கை இராஜதந்திரிகள் தமது சொந்த செயலில் உள்ள நெறிமுறை தொழில்முனைவோராக இருந்து, மோதல் மேலாண்மைக்கான மாற்று விதிகளை உருவாக்க குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்".

"ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினராக, பிரிவினை மற்றும் சுயாட்சி இரண்டையும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் சாத்தியமான கூறுகளாக எதிர்க்கும் புதிய விதிமுறைகளை வலியுறுத்துவதில் இலங்கை முக்கிய பங்கு வகித்துள்ளது".

"இலங்கை மோதலை, மோதல் மேலாண்மை குறித்த ஒரு புதிய சர்வதேச ஒருமித்த கருத்தின் தொடக்கமாகக் காணலாம். இதில் இறையாண்மை மற்றும் தலையிடாத விதிமுறைகள் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றன. ரஸ்யா மற்றும் சீனாவால் மட்டுமல்ல, பிரேசில் போன்ற நாடுகளாலும் இது ஆதரிக்கப்படுகின்றது". (லூயிஸ்: 2010, பக்கம் 658 – 661)

2009 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு அமர்வின் பின்னணி நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உணர்ச்சிவசப்பட்டதாக இருந்தது. நீண்ட இலங்கை யுத்தம் அதன் முடிவை எட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த யுத்தத்தின் முடிவு என்னவாக இருக்கும்?

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் சமூகங்களிடமிருந்து மட்டுமின்றி, மனிதாபிமான தலையீட்டின் மூலம் இரத்தக்களரி நிறுத்தப்பட வேண்டும் என்ற தாராளவாத மனிதாபிமானக் கண்ணோட்டத்திலிருந்தும் பாரிய அழுத்தம் இருந்தது. இது 'மனிதாபிமான இடைநிறுத்தம்' என்றதொரு சூத்திரத்தை எடுத்தது. லுக்தர் பிராஹிமி மற்றும் கிறிஸ் பாட்டன் போன்றோர் 'நியுயோர்க்

ரைம்ஸ்' பத்திரிகையில் ''கடற்கரையில் இரத்தக்களரி'' என்ற தலைப்பில் கட்டுரையை எழுதியிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் 'மனிதாபிமான இடைநிறுத்தம்' மற்றும் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான தீர்மானத்தை முன்வைத்தது. ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு திட்டமிடப்பட்ட தீர்மானத்திற்கான நகல் இதுதான்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சிரியா அல்லது லிபியா குறித்து நடத்தப்பட்டதைப் போன்றதொரு மிகவும் தீவிரமான சிறப்பு அமர்வை நடத்த முயற்சி செய்யப்பட்டது. இதற்கு 16 நாடுகளின் கையொப்பங்கள் தேவைப்பட்டன. தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் (சார்க்) போன்ற அணிசேரா இயக்கத்தில் இருந்த எங்கள் நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் சேர்ந்து இலங்கைக் குழு ஒரு சிறப்பு அமர்வை நடத்துவதற்கு தேவையான கையொப்பங்கள் பெறுவதைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டது.

புலிகள் மீதான இறுதித் தாக்குதல் என்னவாக இருக்கும் என்பதை ஐ.நா. கட்டளைப்படி 'இடைநிறுத்தம்' செய்ய அழைப்பு விடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சிறப்பு அமர்வை நகர்த்த முடியாதபடி, 16 கையொப்பங்களைப் பெறுவதைத் தடுக்க நாங்கள் கடுமையாகப் போராடி வருகிறோம் என்பதை நான் முழுமையாக உணர்ந்தேன்.

போர் முடிவடைந்த சிறிது நேரத்திலேயே 2009 மே 18 – 19 ஆம் திகதிகளில்தான் அவர்களால் கடைசிக் கையொப்பத்தைப் பெற முடிந்தது. 10 நாட்களாக இறுதிக் கையொப்பத்தைப் பெறுவதில் அவர்களுக்குச் சிரமம் இருந்தது. போதுமான கையெழுத்துகள் பெற்றவுடன் அமர்வு முழு வேகத்தில் நகர்ந்தது.

ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டு வாக்களிக்கப்படும் வரை காத்திருப்பதற்குப் பதிலாக, இலங்கை அணிசேரா இயக்கத்துடன் சேர்ந்து முன்முயற்சியை எடுத்தது. நாங்கள் எங்களுடைய சொந்தத் தீர்மானத்தை முன் வைத்தோம். அது வாக்கெடுப்புக்குச் சென்றது. அணிசேரா இயக்கத்துடன் இணைந்து நாங்கள் உருவாக்கிய தீர்மானத்தின் காரணமாக, ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை எமது தீர்மானத்துக்கு ஆதரவாகப் பெற்றோம்.

விடயங்களை தொகுத்து ஆராய்ந்தால், உண்மையில் எங்கள் தீர்மானம் ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானத்தில் கூறப்பட்ட சில விடயங்களையும் கொண்டிருந்தது. அதாவது, ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானத்தில் ஒவ்வொன்றும் ஆட்சேபிக்கத்தல்லாது, முற்போக்கானதாக, பொதுவாக தாராளமயமாக இருந்தது. இது இறையாண்மையைப் பாதுகாக்கின்றது. ஆனால் மக்கள் இறையாண்மைக்கான உறுதிப்பாட்டுடன் முதலீடு செய்யப்பட்ட ஒரு தேசிய அல்லது மாநில இறையாண்மை, நாங்கள் மேற்கொண்ட ஆதரவைப் பெறுவதற்கும், எங்களுக்கு எதிரான தீர்மானத்தைத் தோற்கடிக்கவும் உதவியது.

விதிமுறைகளின் மோதல் என்பது வெறுமனே தாராளவாத மனிதாபிமான தலையீட்டிற்கு எதிராக தேசிய இறையாண்மையென திரும்பத்திரும்ப வலியுறுத்துவதல்ல. மாறாக, பிரேசில், இந்தியா, இந்தோனேசியா மற்றும் வளர்ந்து வரும் ஜனநாயக நாடுகள் மிகவும் வசதியாகக் காணக்கூடிய ஒரு சித்தாந்தமாகும். அதன் அர்த்தம் முற்போக்கான சீர்திருத்தங்களுடன் கூடிய தேசிய இறையாண்மையை வலுவாகப் பாதுகாத்தல் என்பதாகும்.

இது உண்மையில் விதிமுறைகளின் மோதலாக இருந்தது, ஆனால் அதை மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட பாணியில் பார்ப்பது தவறாக இருக்கும். இதில் இது பிளவின் இருபுறமும் பலரால் முன்வைக்கப்படுகிறது. இது வழக்கமாக தாராளவாத மனிதாபிமானம் அல்லது 'தாராளவாத மனிதாபிமான தலையீடு' என்று நீங்கள் விமர்சிக்கிறீர்கள் என்றால், பழைய பாணி மேற்குலக இறையாண்மைக்கு எதிராக, இப்போது 'கிழக்குலக' இறையாண்மை என்று மறுபெயரிடப்பட்டுள்ளது.

முன்னாள் யூகோஸ்லாவியா – கொசோவோ விடயத்தில் தாராளவாத மனிதாபிமானம் அல்லது தாராளவாத மனிதாபிமான தலையீடு மேலோங்கியது. ஆனால் 2009 இல் இலங்கை விடயத்தில் அது வெற்றியளிக்கவில்லை. 'தாராளவாத மனிதாபிமான தலையீட்டு' அழைப்புகள் ஒரு குறிப்பிட்ட வகையான சூழ்நிலை, ஒரு குறிப்பிட்ட வகையான ஆட்சிகள் அல்லது ஒரு குறிப்பிட்ட வகையான இயக்கத்தை உள்ளடக்கிய போது மட்டுமே செயல்படும்.

டாக்டர் கிஸிஞ்சரின் ''சீனாவைப் பற்றி'' என்ற நூல் எனக்கு மிகவும் பிடித்திருந்தது என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சீனர்கள் ஏன் விடயங்களை அவர்களது சொந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்பதையும், அவர்கள் தேசிய – மாநில இறையாண்மையை மையமாகக் கொண்டுள்ளனர் என்பதையும் அவர் புரிந்து கொள்கிறார். இது சீனாவைப் பற்றி மட்டுமல்ல, வியட்நாம் மற்றும் தங்களைப் பழமையானவர்களாகக் கருதும் பல சமூகங்கள் மற்றும் நாடுகளைப் பொறுத்த வரையிலும் உண்மை. பழைய சமூகங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வரும் நாடுகள். அவை வெளிப்புறத் தலையீடு என்ன செய்ய முடியும் என்பது குறித்து மிகவும் கூர்மையான உணர்வைக் கொண்டவை.

கிழக்கு மற்றும் மேற்கத்தைய நாடுகளின் அரசுகள் மற்றும் சமூகத்தின் தன்மை குறித்து லெனின், ட்ரொட்ஸ்கி மற்றும் கிராம்சி ஆகியோர் கூறிய ஒரு கருத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கிழக்கு நோக்கிச் செல்லச் செல்ல, அரசு என்பது ஒரு கடினமான விடயம். ஆனால், நம்பகமான சூழ்நிலை இல்லாதபோதும், பிற இலட்சியங்கள் மதிப்புகள் இல்லாதபோதும், அரசு இறையாண்மையை மீண்டும் வலியுறுத்துவது வெற்றி பெறாது.

நான் கற்றுக்கொள்ளும் இறுதிப்பாடம் இதுதான்:

நீங்கள் தார்மீக உயர்நிலையை இழந்தால், நீங்கள் வாக்குகளை இழக்கிறீர்கள். நீங்கள் தார்மீக உயர்நிலையை ஆக்கிரமித்து, உங்கள் எதிரிகளை அதிலிருந்து வெளியேற்றுவதில் வெற்றி பெற்றால், உங்கள் பார்வையில் மட்டுமல்ல, உலகளாவிய அர்த்தத்திலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

(தயான் ஜெயதிலக இலங்கையின் முன்னாள் ராஜதந்திரியாவார். ரஸ்யா உட்பட சில நாடுகளில் இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிய அவர், இலங்கை அரசாங்கத்தின் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரின் இறுதிக் கட்டத்தின் போது ஜெனீவாவில் ஐ.நாவுக்கான இலங்கைத் தூதராகப் பணியாற்றியிருந்தார். மேலே தரப்பட்டவை 2012 ஆண்டு பர்சிலோனாவில் அவர் நிகழ்த்திய உரையின் முக்கியமான சில பகுதிகளாகும்)

# மம்தானி வெற்றி: மீண்டும் போராடுவதற்கான ஒரு படி

நியுயோர்க் நகர மேயருக்கான தேர்தலில் ஜோஹ்ரான் குவாமே மம்தானி 50 சதவிதத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

இந்தத் தேர்தலின் போது இடைவிடாது காட்டப்பட்ட மம்தானி எதிர்ப்பு விளம்பரங்களில் பரவியிருந்த இஸ்லாமிய வெறுப்பு, குடியேற்றவாசிகள் மீதான வெறுப்பு மற்றும் கம்யூனிச வெறுப்பு போன்ற கொடூரமான பிரச்சாரத்துக்கு இந்த வெற்றி ஒரு அடியாகும்.

கோடீஸ்வரர்கள், சியோனிஸ்ட்டுகள், ரியல் எஸ்டேட் முதலாளிகள் இந்த வெறுப்புப் பிரச்சாரங்களுக்காக தாம் சட்ட விரோதமாக உழைத்த பணத்தில் சுமார் 50 மில்லியன் டொலர்களைச் செலவிட்டார்கள்.

உண்மையில் நியுயோர்க் நகர மேயர் தேர்தல் அங்கு நிலவும் பல பிரச்சினைகள் மீதான ஒரு வாக்கெடுப்பாக மாறியது.

ஜனாதிபதி ட்ரம்ப் மம்தானியை ஒரு கம்யூனிஸ்ட் என்று அழைத்ததுடன், கியூமோ என்ற வலதுசாரி வேட்பாளரை ஆதரித்தார். கியூமோ விவரிக்க முடியாத அளவுக்கு மம்தானிக்கு எதிராக யுஐஆல் உருவாக்கப்பட்ட அருவருப்பான முஸ்லீம் எதிர்ப்பு விளம்பரங்களை வெளியிட்டார்.

முஸ்லீம்கள் மீதான வெறுப்புத் தாக்குதல்களையும், கம்யூனிச எதிர்ப்பையும் நியுயோர்க்கின் வாக்காளர்கள் கண்டு கொள்ளவில்லை என்பது தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு முன்னேற்றமாகும்.

தேர்தல் வெற்றிக்குப் பிறகு 'தி நியுயோர்க் போஸ்ட்', மம்தானி ஒரு சுத்தியல் அரிவாள் உள்ள கொடியை ஏந்தி நியுயோர்க்கை ஒரு சிவப்பு ஆப்பிள் என்று அழைப்பது போன்ற ஒரு கேலிச்சித்திரத்தை வெளியிட்டது.

மம்தானி ஒரு கம்யூனிஸ்ட் அல்ல. தன்னை ஒரு புரட்சியாளர் என்றும் அவர் கூறிக் கொள்ளவில்லை. அவர் தன்னை ஒரு "ஜனநாயக சோசலிஸ்ட்" என்று கூறிக் கொள்கிறார். அதாவது, சீர்திருத்தங்களை ஆதரிக்கிறார். ஏகாதிபத்திய ஆதரவுக் கட்சியான ஜனநாயகக் கட்சியை தீவிரமாக ஆதரிக்கும்படி அதிக



தொழிலாளர்களையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் கொண்டு வருவதே அவரது ஒட்டுமொத்த உத்தி.

மம்தானியின் தேர்தல் பிரச்சாரம் சில மிகவும் கவர்ச்சிகரமான, வரையறுக்கப்பட்ட கோரிக்கைகளை முன் வைத்துள்ளது. இலவச மற்றும் வேகமான பேருந்து சேவை, மலிவு விலையில் வீடுகள், குழந்தைப் பராமரிப்பு என்பவையே அவை. இந்தக் கோரிக்கைகள் எவ்வளவு குறைவாக இருந்தாலும், நியுயோர்க் நகரத்தை மையமாகக் கொண்ட வால் ஸ்ட்ரீட் மற்றும் ரியல் எஸ்டேட் கோடீஸ்வரர்கள் அவற்றை அச்சுறுத்தலாகவே கருதுகின்றனர்.

சொற்பொழிவு ஆற்றல் உள்ளவர்களாகவோ, கவர்ச்சிகரமானவர்களாகவோ இருந்தாலும், சட்ட மன்றம் மூலமாகவோ அல்லது ஒரு தனி நபரின் வார்த்தைகள் மூலமாகவோ கோரிக்கைகளை வெல்ல முடியாது. அதற்கு எப்போதும் போராட்டம் தேவை.

அவர்கள் தங்களை சீர்திருத்தவாதிகள் அல்லது புரட்சியாளர்கள் என்று அழைத்துக் கொண்டாலும், போராட்டம் வெடிக்கும் வரை போராட்டத்துக்கான எவருடைய விருப்பமும் தெரிய வராது. ஆனால் வர்க்கப் போராட்டம் சாத்தியம். மேலும் தேர்தல் வெற்றி அதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் ஒரு உத்வேகத்தை உருவாக்க முடியும்.

தனது பிரச்சாரம் 100,000 தீவிர தன்னார்வலர்களை ஈர்த்தது, அவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள் என மம்தானி கூறினார். அவர்களின் செயல்பாடும் உற்சாகமும் அவருக்கு தேர்தலில் வெற்றியைப் பெற்றுத் தந்தன.

தனது தேர்தல் வெற்றி உரையில் குடியேற்றவாசிகளைப் பற்றிப் பேசிய மம்தானி பின்வருமாறு கூறினார்: "எனவே, ஜனாதிபதி ட்ரம்ப், நான் சொல்வதைக் கேளுங்கள். நம்மில் யாரையாவது அடைய நீங்கள் நம் அனைவரையும் கடந்து செல்ல வேண்டும்."

இந்தக் கருத்து ஒரு தீவிரமான போராட்டத்திற்கு களம் அமைக்கிறது. லொஸ் ஏஞ்சல்ஸ், வொசிங்டன் டி.சி., சிக்காக்கோ மற்றும் பிற இடங்களில் குடிற்றேவாசிகளைப் பின் தொடர்வதைப் போலவே, நியுயோர்க் நகரத்திலும் குடியேற்றவாசிகளைப் பின் தொடர்வதற்கு ட்ரம்ப் தனது குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்க குண்டர்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளார் என்பதில் சந்தேகமில்லை. புதிய நிர்வாகத்தின் ஆரம்ப சோதனை, ட்ரம்ப் "நம்மில் யாரையும் நெருங்குவதை" தடுக்க அணி திரட்டுவதற்கு எவ்வாறு உதவுகிறது என்பதில்தான் தங்கியிருக்கிறது.

குடியேற்றவாத தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி, தேர்தல் தன்னார்வலர்களை அணி திரட்டுவதும், குடியேற்றவாசிகள் மீதான தாக்குதல்களுக்கு எதிரான எதிர்ப்பில் மற்றவர்களைச் சேர்ப்பதும் ஆகும். இது ஏற்கெனவே சிறிய அணிகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

இது செய்யப்பட்டால் மிகவும் புரட்சிகரமான மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கண்ணோட்டத்தைக் கொண்டவர்கள் இதில் சேர வேண்டும். மேலும், வாய்ப்புக் கிடைக்கும் போது, ஒரு புரட்சிகர அணுகுமுறை வெற்றியை எவ்வாறு சாத்தியமாக்குகிறது என்பதை நிரூபிக்க வேண்டும்.

சீர்திருத்தவாதத்தின் மீதான ஏமாற்றத்தினாலோ அல்லது வேறு வகையான ஏமாற்றத்தினாலோ மக்கள் புரட்சிகரத் தீர்வை நோக்கித் திரும்புவதில்லை. வெற்றி பெறுவது எப்படி என்பதைக் காட்டும் புரட்சியாளர்களால்தான் அது நிகழ்கிறது.

மூலதனம் என்பது பணம். மூலதனம் என்பது பொருட்கள். அதன் மதிப்பு காரணமாக, அது தனக்குத்தானே மதிப்பைச் சேர்க்கும் அசாத்தியத் திறனைப் பெற்றுள்ளது. இது மேலும் மேலும் குட்டி போடுகின்றது. அல்லது, குறைந்தபட்சம், தங்க முட்டைகளை இடுகின்றது.

**–கார்ல் மார்க்ஸ்**

# மருத்துவமும் முதலாளித்துவமும்



**2024** டிசம்பர் 4 ஆம் நாள், அமெரிக்காவின் யுனைடெட் ஹெல்த்கேர் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பிரையன் தாம்ஸனை (Brian Thompson) 27 வயது இளைஞர் லுயிஜி மான்ஜோனி (Luigi Mangione) நியூயார்க்கின் மான்ஹாட்டனில் சுட்டுக்கொன்றார். கைதான மான்ஜோனியிடம் கிடைத்த கடிதத்தில், "இதை நான் தனியாகத்தான் செய்தேன். உலகில் அமெரிக்காவின் மருத்துவச் செலவுகள்தான் அதிகம். ஆனால் நாமோ சராசரி ஆயுளில் 42 ஆம் இடத்தில்தான் உள்ளோம். கோர்ப்பரேட்டுகளின் அதிகாரம் அளவுகடந்து விட்டது. ஏனெனில் அமெரிக்கப் பொதுமக்கள் இவர்களைத் தப்பிக்க விடுகிறார்கள்" என்று எழுதியிருந்தார்.

உலகெங்கும் மக்கள் மான்ஜோனியின் பக்கம் நின்றனர். இதற்குக் காரணம், மருத்துவம் என்னும் பெயரில் முதலாளித்துவம் செலுத்தும் ஆதிக்கமேயாகும். மருத்துவத்துறையின் வளர்ச்சி மக்களின் நோய்களை விரைவில் கண்டறியவும் சிகிச்சையை ஆற்றலோடு செலுத்துவதற்கும் பல்வேறு முறைகளை வடிவமைக்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் புதிய தடுப்பூசிகள், நுண்ணுயிர்க்கொல்லிகள், பரிசோதனை இயந்திரங்கள் போன்ற கண்டுபிடிப்புகளால் சராசரி ஆயுள் 30 ஆண்டுகளிலிருந்து 48 ஆண்டுகளாக உயர்ந்தது. 1950–1980 காலம்தான் மிகவும் வேகமான சராசரி ஆயுள் வளர்ச்சியை உலகம் கண்டது.

தொற்று நோய்களின் மீதிருந்த கவனம், இன்று நீரிழிவு, இரத்தக்கொதிப்பு போன்ற வாழ்வுமுறை தொடர்புடைய தொற்றாத நோய்களின் பக்கம் திரும்பியுள்ளது. எச்.ஐ.வி போன்ற கொடிய நோய்களுக்கும் தீர்வு காணும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

க்ரிஸ்பர் (CRISPR) தொழில்நுட்பம் கொண்டு சிசிஆர்5 (CCR5) மரபணு மாற்றத்தின் வாயிலாக எச்.ஐ.வி (HIV) எதிர்ப்பை உருவாக்க முடியும். வெள்ளை இரத்த அணுக்களில் ஏற்படும் புற்றுநோய்களை எதிர்க்க கார்–டி செல் சிகிச்சை (CAR-T Cell therapy) இன்று இந்தியாவிற்கும் வந்துள்ளது. ஆனால் கார்–டி செல் சிகிச்சைக்கு 25–50 இலட்சம் ரூபாய் வரை செலவாகும். அதிநவீன சிகிச்சைகள் பல இலட்சங்களை செலவழித்தால் மட்டுமே பெறமுடியும். மருத்துவத்துறையில் முதலாளிகளின் பங்கு பால் ஸ்டார் எழுதிய 'அமெரிக்க மருத்துவமும் சமூக மாற்றமும்' என்னும் நூலில், "அமெரிக்க மருத்துவம் இயற்கையாக வளரவில்லை, அது முதலாளித்துவ சக்திகளால் உருவாக்கப்பட்டது" என்கிறார்.

### மருத்துவர் அனுஷ்வர் இறையன்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொது சேவையாக இருந்த மருத்துவம், இருபதாம் நூற்றாண்டில் இலாபத்தை நோக்கி நகரத் தொடங்கியது. அமெரிக்க மருத்துவக் கூட்டமைப்பு தொடங்கப்பட்டபின் அதிகாரம் சில கைகளில் குவிந்தது. இது மருத்துவத்தில் ஏகபோக உரிமைக்கு வழிவகுத்தது. மருத்துவமனைகள் சேவை நிறுவனங்களிலிருந்து இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாறின.

### மருத்துவக் காப்பீடும் முதலாளித்துவமும்

மருத்துவக் காப்பீடு தனியார் சந்தையில் உருவானது. அரசினால் உருவாக்கப்படவில்லை.

விசென்ட் நவாரோவின் 'முதலாளித்துவத்தின் கீழ் மருத்துவம்' (Vicente Navarro: Medicine Under Capitalism) என்ற நூல் குறிப்பிடுவதுபோல், காப்பீட்டாளர்கள் குறைந்த ஆபத்துள்ள ஆரோக்கியமானவர்களை மட்டும் சேர்க்க விரும்புகிறார்கள். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு காப்பீடு, வேலையுடன் இணைக்கப்பட்டது. இதனால் முறைசாரா தொழிலாளர்கள், வேலையில்லா மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் பாதிப்படைந்தனர். மருத்துவப் பாதுகாப்பு என்பது, ஓர் உரிமை என்பதில் இருந்து வாங்கு பொருளாக மாறிவிட்டது. இவையனைத்தும் காசளிக்கும் திறனை மட்டுமே கருத்திற்கொண்டவையே தவிர மக்களின் தேவைகளைக் கருதவில்லை.

மருத்துவமே வர்க்கப் பிரிவினையை வலுப்படுத்தியது. மேல்தட்டு மக்கள் உலகத்தர மருத்துவ வசதிகளை அனுபவிக்கும்போது, ஏழைத் தொழிலாளர்களுக்கு அந்த வாய்ப்பு அமைவதில்லை. சோஷலிச நாடுகளில் மருத்துவம் அனைவருக்கும் இலவசம். ஆனால் முதலாளித்துவ நாடுகளில் இலாபமீட்டும் கருவியாகவும், வர்க்க ஆதிக்கத்தின் உந்துசக்தியாகவும் இருக்கிறது.


புதிய ஜி.எஸ்.டி சலுகைகளின் கீழ் காப்பீட்டிற்கான ஜி.எஸ்.டி 0% ஆகக் குறைந்துள்ளது. ஆனால் தனியார் நிறுவனங்கள் அடிப்படைத் தொகையை உயர்த்தி இலாபம் ஈட்டுகின்றன. இதை அரசு கண்காணிக்க வேண்டும். 0% ஜி.எஸ்.டி சலுகையின் கீழ் உள்வரிச் சலுகைகள் (உள்ளீட்டு வரிக்கடன்) கிடையாது. எனவே அந்தச் செலவுகளும் மக்களிடமிருந்தே வசூலிக்கப்படும். ஏற்றுமதிப் பொருட்களுக்கு வழங்கப்படும் பூச்சிய விகித வழங்கலில் (பூச்சிய விகித வழங்கீடு) காப்பீடு வருவதில்லை. காப்பீடு 'வரிவிலக்கின் கீழ்' (வரி விலக்கு) உள்ளதால், இச்சலுகைக்குக் கால அளவு உண்டு.

### கியூபாவின் சுகாதாரத்துறை

கியூபாவில் மருத்துவமும் சுகாதாரத்துறையும் முழுமையாக அரசால் நடத்தப்படுகின்றன. அனைத்து மக்களுக்கும் இலவச மருத்துவம் என்பதே கியூபாவின் தாரக மந்திரம். மருத்துவப் பாதுகாப்பு அடிப்படை உரிமையாகும் வர்த்தகமயமான வாங்குபொருளல்ல. உலகத்தின்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# 2026 வரவு செலவுத் திட்டம் - ஒரு பார்வை




2026 வரவு செலவுத் திட்ட உரைக்கு நான் அளித்த பதிலில் அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியது மட்டுமின்றி, தனக்கு வாக்களித்த மக்களுக்கும் துரோகமிழைத்துள்ளது என்பதை அம்பலப்படுத்தினேன்.

முன்னைய அரசாங்கத்தால் அடையப்பட்ட பருவின பொருளாதார நிலைத்தன்மையை தற்போதைய அரசாங்கமும் பராமரித்து வருவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், பொருளாதார வளர்ச்சிக்கான எந்தவொரு திட்டமும் பற்றாக்குறையில் உள்ளதை நான் சவால் செய்வதும் அவசியம்.

இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு "முறைமை மாற்றம்" அல்ல. இது ஒரு புதிய கொடியால் மூடப்பட்ட அதே பழைய விடயம். இனி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்:

**1. ஒரு ரில்லியன் ரூபாய் மோசடி: ஏழைகளுக்கு வரி விதிக்கும் போது உபரியை மறைத்தல்.**

**பாரிய எதிர்பாராத வரி:** திறைசேரி எதிர்பாராத விதமாக ஒரு ரில்லியன் ரூபாய் ரொக்க உபரியால் நிரம்பி வழிகிறது என்று நான் வெளிப்படுத்தினேன். இந்த எதிர்பாராத வருவாய் அரசாங்கம் எதிர்பார்க்காத அளவுக்கு அதிகமான வாகன இறக்குமதி வரிகளிலிருந்து (இறக்குமதி செய்யப்பட்ட 1.4 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான வாகன இறக்குமதி வரிகளிலிருந்து) வந்தது.

**நிவாரணம் இல்லை, அதிக வரிகள் மட்டுமே:** இந்த ஒரு ரில்லியன் ரூபாய் உபரியை நிவாரணம் வழங்குவதற்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அரசாங்கம் வரிச்சுமையை அதிகரித்து வருகின்றது. அவர்கள் வற் (VAT) வரி வரம்பை மாதத்திற்கு 5 மில்லியனில் இருந்து 3.6 மில்லியன் ரூபாயாக (ஒரு நாளைக்கு வெறும் 100,000 ரூபாய்) குறைத்து சிறு வணிகங்களை நேரடியாகப் பாதித்துள்ளனர்.

**புதிய சொத்து வரி:** இந்த அரசாங்கம் ஒரு புதிய, பரந்த அளவிலான சொத்து வரியை அமுல்படுத்த இரகசியமாக ஒப்புக் கொண்டுள்ளதாகவும், இது 2027 முதல் காலாண்டில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் நான் எச்சரித்தேன்.

*கலாநிதி ஹர்சா டி சில்வா*

**2. ஒரு "வேடிக்கையான" வீட்டுத் திட்டம்: 100 சதுர அடி வீட்டுக்கு 1 மில்லியன் ரூபாய்!**

வரவு செலவுத் திட்டத்தில் 7,000 வீடுகளைக் கட்ட 10.2 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. எனது கணக்கீட்டின்படி, இது ஒரு வீட்டுக்கு 1 மில்லியன் ரூபாய். ஒரு சதுர அடிக்கு 10,000 ரூபாய் கட்டுமானச் செலவு என்பதால், இந்த 1 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு 100 சதுர அடி கட்டமைப்பைக் கட்ட மட்டுமே போதுமானது. எனவே, இதை "வீடு" என்று கூறுவதை விட "அவமானம்" என்றே சொல்லலாம்.

**3. "416 தொழிலாளர்" கடன்: அரச ஊழியர்களுக்கான இன்னுமொரு "வேடிக்கை"**

அரச ஊழியர்களுக்கான அரசாங்கத்தின் "சலுகை" வீட்டுக் கடன் அதே அளவுக்கு அபத்தமானது. அவர்கள் முழுத் திட்டத்திற்கும் 500 மில்லியன் ரூபாய்களை மட்டுமே ஒதுக்கியுள்ளனர்.

நாட்டிலுள்ள 1.4 மில்லியன் அரச ஊழியர்களுக்கும் அவர்கள் ஒதுக்கிய தொகை 416 ஊழியர்களுக்கு மட்டுமே போதுமானது. எனவே, இதை கொள்கை என்று அழைப்பதை விட ஓர் அதிர்ஸ்ட இலாபச் சீட்டு என்று அழைக்கலாம்.

அவர்கள் கட்டுமானப் பொருட்கள் மீதான கடுமையான வரிகளை கவனத்தில் எடுக்காமல் புறக்கணித்துள்ளனர். அதாவது, சீமெந்து மீது 49 சதவீத வரியும், குளியலறை பொருத்துதல் மீது 60 சதவீத வரியும், 'பிவிசி' குழாய்கள் மீது 92 சதவீத வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

**4. "முறைமை மாற்றம்" இல்லை:**

இந்த வரவு செலவுத் திட்டம் "முறைமை மாற்றம்" இல்லை என்பதை நிரூபிக்கின்றது. கடன் வாங்குவதை விமர்சித்தவர்கள் இப்போது 2026ஆம் ஆண்டில் 3.8 ரில்லியன் ரூபாய்களை (உள்நாட்டில் 3,110 பில்லியன் மற்றும் வெளிநாட்டில் 700 பில்லியன்) கடன் வாங்கத் திட்டமிட்டுள்ளனர்.

முந்தைய அரசாங்கத்தால் அடையப்பட்ட பொருளாதார நிலைப்படுத்தலுக்குரிய பெருமையை தமதாக்கிக் கொள்ளப் பார்க்கின்றனர். முன்னைய ஆட்சியில் பணவீக்கம் 17 சத வீதத்திலிருந்து 1 சத வீதமாகவும், அமெரிக்க டொலரின் பெறுமதி 370இல் இருந்து 294 ரூபாவாகவும் குறைந்திருந்தது. இப்பொழுது அவர்களது ஆட்சியில் டொலரின் பெறுமதி 307 ரூபாயை எட்டியுள்ளது.

**5. இளைஞர்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் துரோகம்:**

இந்த வரவு செலவுத் திட்டம் தமக்கு வாக்களித்த இளைஞர்களின் 5 எளிய கனவுகளை நீர்த்துப்போகச் செய்துள்ளது.

**வேலைகள்:** வாக்குறுதியளிக்கப்பட்ட அரசுத்துறை வேலைகள் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

**வரி நிவாரணம்:** வரி விதிக்கப்படுவதற்குரிய வரம்பை 200,000 ரூபாயாக உயர்த்துவது என்ற வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.

**சுதந்திரமாக தொழில் செய்பவர்கள்:** முன்பு வரி செலுத்தாத இணையத்தில் சுதந்திரமாக தொழில் செய்பவர்களுக்கு (Online Freelansers) இப்பொழுது 15 சத வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்:** திண்டாடிக் கொண்டிருக்கும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட "நிவாரண வங்கி" (சஹன வங்கி) இன்னும் செயல்படவில்லை. மேலும் "அரிசி மா:பியா" முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வலுவாக உள்ளது. சிறிய ஆலைகள் ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளன.

**6. நேர்மையற்ற** நேரடி அந்நிய முதலீட்டுக் **கோரிக்கைகளும் ஏற்றுமதியாளர் நெருக்கடியும்:**

புதிய நேரடி அந்நிய முதலீடு (FDI) 823 மில்லியன் டொலர்கள் என்ற அரசாங்கத்தின் கூற்று கபடத்தனமானது. இந்த எண்ணிக்கையில் 54 சத வீதத்திற்கும் அதிகமானவை முந்தைய அரசாங்கங்களால் கையெழுத்திடப்பட்ட பழைய திட்டங்களிலிருந்து வருகின்றன. இதில் அதானி துறைமுகமும் (229 மில்லியன் டொலர்கள்) அடங்கும்.

நமது பொருளாதாரத்தின் உயிர்நாடியான நமது ஏற்றுமதியாளர்கள் நெருக்கடியில் உள்ளனர். வாக்குறுதியளிக்கப்பட்ட 45 நாள் பணத்தைத் திரும்பப் பெறும் முறை செயல்படாததால், SVAT நீக்கம் கடுமையான பணப் புழக்க சிக்கலை உருவாக்கியுள்ளது.

RCEP (பிராந்திய விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை) மற்றும் ECTA (பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம்) போன்ற முக்கியமான வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து நிலவும் மௌனம் அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசியல் ரீதியிலான விருப்பம் இல்லை என்பதைக் காட்டுகிறது.

**7. முதியோர் மீதான புறக்கணிப்பும் ஊழல் நடைமுறைகளும்:**

ஊழல் எதிர்ப்பு செயல்பாடுகளை நான் ஆதரிக்கின்ற அதே வேளையில், 1,775 கனரக கார்களுக்கான (Double Cabs) ஒப்பந்தம் போன்ற புதிய கொள்முதல் முறைகேடுகளைச் சுட்டிக்காட்டினேன். இதில் கட்டாய ஏல காலம் 42 நாட்களில் இருந்து வெறும் 12 நாட்களாகக் குறைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வரவு செலவுத் திட்டம் நமது மூத்த குடிமக்களுக்கு பாதகமாக இருக்கிறது என்பதை இறுதியாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முறைசாரா துறைக்கான ஓய்வூதியத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. இன்னும் மோசமாக இந்த ஆண்டு முடிவுக்குள் மூத்த குடிமக்களின் நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி மானியத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் சர்வதேச நாணயத்துடன் (IMF) இரகசியமாக ஒப்புக்கொண்டதாக நான் குற்றம் சாட்டுகிறேன். இது வரவு செலவுத் திட்ட உரையில் தவிர்க்கப்பட்ட ஒரு முக்கியமான உண்மை.

எனது பகுப்பாய்வின்படி, இந்த 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மாற்றத்துக்கான ஒரு வாகனமாக அல்லாமல், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளின் ஒரு ஆவணமாகவே நான் பார்க்கின்றேன். இது இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் நாட்டின் முக்கிய பொருளாதார இயங்கு சக்திகளின் உண்மையான தேவைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது.

(பொருளாதார நிபுணரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்சா டி சில்வா, கொழும்பிலிருந்து செயல்படும் Colombo Telegraph என்ற இணையத்தளத்தில் எழுதிய கட்டுரையின் முக்கியமான பகுதிகள் இவை)

## காலநிலை மாற்றம் புவிவெப்பமயமாதலால் வழக்கத்தைவிட அதிக பாதிப்புகளை உருவாக்கும் புயல்கள்

காலநிலை மாற்றத்தால் புவி வெப்பமயமாதல் அதிகரித்து வரும் நிலையில் புயல்களின் பாதிப்பு வழக்கத்தை விட மேலும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த புயல்களால் அதிகளவிலான பாதிப்பை சந்திக்கக்கூடிய நாடுகளாக தெற்குலக குறிப்பாக தெற்காசிய நாடுகளே உள்ளன. கடந்த வாரம் பிலிப்பைன்ஸில் பெரும் அழிவை ஏற்படுத்திய கல்மேகி புயல் இந்த ஆண்டின் மிக மோசமான புயல்களில் ஒன்றாக உள்ளது. இப்புயலால் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர். நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து போயுள்ளன. பலகோடி ரூபாய் மதிப்பில் சேதத்தை உருவாக்கிய அப்புயல் தற்போது வியட்நாமையும் தாக்கி அழித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒரே மாதத்தில் ஆறு சக்தி வாய்ந்த புயல்கள் பிலிப்பைன்ஸை தாக்கின. இதனுடன் ஒப்பிடும் போது 2025 நவம்பர் மாதம் ஒரே நேரத்தில் நான்கு வெப்பமண்டலப் புயல்கள் உருவாகியுள்ளது. இது புயல்கள் குறுகிய கால இடைவெளிகளுக்குள் உருவாகி அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்ற ஆபத்தை காட்டுகிறது.

ஒரு ஆண்டு முழுவதும் உருவாகும் புயல்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்றாலும், அவை ஒரே பருவத்தில் உருவாகி மிகக் குறுகிய காலத்தில் வீசி அதிக பாதிப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்று சிங்கப்பூரின் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (Nanyang Technological University) காலநிலை விஞ்ஞானி திருபாஜோதி சமந்தா (Dhrubajyoti Samanta) தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள கிராந்தம் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச் சூழல் நிறுவனத்தின் வானிலை ஆய்வாளர் பென் கிளார்க் இது குறித்துக் கூறுகையில், வடமேற்கு பசிபிக் மற்றும் தென் சீனக் கடல் ஆகிய இரண்டிலும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை அசாதாரணமாக உள்ளது. இந்த அதிக வெப்ப நிலையால், கல்மேகி புயல் அதிக சக்தி வாய்ந்ததாகவும், அதிக மழையைக் கொண்டதாகவும் இருக்கிறது. இந்த கடல் மேற்பரப்பு வெப்பநிலை உயர்வுக்கு புவி வெப்பமயமாதலே முதன்மைக் காரணம் என குறிப்பிட்டுள்ளார்.

**பசுமை இல்ல வாயுக்கள்**

உலக நாடுகள் பசுமை இல்ல வாயுக்கள் (Greenhouse gases) வெளியேற்றத்தை கட்டுப்படுத்த தவறுவதே புவி வெப்பமயமாதல் அதிகரிப்பதற்கும் அதன் மூலமாக வெப்பமண்டலப் புயல்கள் தீவிரமாக

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

## மின் செயற்பாட்டுக்கு இடையூறு வரலாம்!



இலங்கை மின்சார சபையின் (Ceylon Electricity Board) 2,200 ஊழியர்கள் விருப்ப ஓய்வுக்கு விணணப்பித்துள்ளனர். இது இலங்கையின் உள் கட்டமைப்பு வசதிகளுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

இவ்வாறு விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்தவர்களில் பொறியாளர்கள், கணக்காளர்கள், அனுபவமிக்க சிரேஸ்ட ஊழியர்கள் அடங்குவர். இந்தளவு தொகை ஊழியர்கள் விருப்ப ஓய்வு பெற்றால் இலங்கை மின்சார சபை தனது வேலைச் சக்தியில் 10 சதவீதத்தை இழக்க நேரிடும். முக்கியமாக மின் பொறியாளர்களின் இழப்பு மின் நிலையங்களின் செயல்பாட்டில் சிக்கலை ஏற்படுத்தக்கூடும் எனக் கருதப்படுகிறது. இது பற்றி சபையே கவலைப்படுவதாகத் தெரிகிறது.

மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பராமரிப்பு அலகுகள் பாதுகாப்பாகச் செயல்படுவதற்கு அனுபவமும் திறமையும் உள்ள ஊழியர்களையே நம்பியுள்ளன. பழையவர்கள் ஓய்வு பெற்றால் புதியவர்களைப் பழக்கி எடுக்க குறைந்தது ஆறு மாதங்களாவது எடுக்கும் என மூத்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

மின்சார சபை அனுபவமிக்க பொறியாளர்களையும் ஊழியர்களையும் இழந்தால், பராமரிப்பு கடினமாகும், தவறுகள் செயலிழப்புகள் அடிக்கடி நிகழும், பராமரிப்புக்கான செலவுகள் அதிகரிக்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

உண்மையில் இந்தப் பிரச்சினை ஒரு தனி நிறுவனத்தின் பிரச்சினை அல்ல. ஒரு தேசியப் பிரச்சினையாகும்.

அரசாங்கங்கள் மாறும் போது ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கத்தின் அரசியல் கொள்கைகள் மட்டுமின்றி, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் என்பனவும் மாறுகின்றன. அதனால் திறமையான பணியாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதை ஒரு தீர்வாகக் காண்கின்றனர். அவ்வாறு வெளியேறியவர்களின் தொகை 2024ஆம் ஆண்டில் 3 இலட்சத்தைத் தாண்டியுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு வெளியேறுவது புதிய விடயமல்ல. 1980 ஆம் ஆண்டுகளில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இது ஆரம்பமாகியது. பின்னர் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் அதை ஊக்குவித்தது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் இந்தப் போக்கு மேலும் அதிகரித்தது.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டை விட்டு வெளியேறுவோர் தொகை மேலும் அதிகரித்துள்ளது. பிரதானமாக மருத்துவர்கள், பொறியாளர்கள், கணக்காளர்கள், கட்டுமானத்துறை பணியாளர்கள் அதிகளவில் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இதனால் நாட்டின் முக்கியமான சேவைத்துறைகள் கடுமையாகப் பாதிக்கப்படுவதுடன், வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசகர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைமையும் ஏற்படுகின்றது.

தற்போது இந்த வெளியேற்றம் தீவிரமடைந்திருப்பதற்குக் காரணம், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயல்படுவதுதான் என பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

–பிரதீப்

---

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

தலைசிறந்த மருத்துவர்களை உருவாக்கும் நாடுகளில் ஒன்று கியூபா. உலகமெங்கும் கியூபாவின் மருத்துவர்கள் பல பேரிடர்களில் மக்களுக்கு மருத்துவ உதவியளிக்கும் உயரிய தொண்டினை ஆற்றுகின்றனர்.

கியூப குடிமக்களின் சராசரி ஆயுள் 79 ஆண்டுகள். குழந்தை இறப்பு ஆயிரம் பிறப்புகளில் நான்கு மட்டுமே – இலத்தீன் அமெரிக்காவிலேயே மிகக்குறைந்த எண்ணிக்கை. உள்நாட்டிலேயே பல தடுப்பூசிகளையும் மருத்துவ தொழில்நுட்பத்தையும் கியூபா தயாரிக்கின்றது. மருத்துவர்– நோயாளி விகிதம் மிக உயர்வானது (150 குடிமக்களுக்கு ஒரு மருத்துவர்). ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குடும்ப மருத்துவரையும் செவிலியரையும் அரசு அளிக்கின்றது.

---

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

வீசுவதற்கும் காரணமாகிறது என விஞ்ஞானிகள் குற்றம் சாட்டியுள்ளனர். அதாவது காலநிலை மாற்றத்தின் காரணமாக, முதலில் கடலின் மேற்பரப்பு வெப்பநிலையை அதிகரிக்கிறது. இது வளிமண்டலத்தில் ஈரப்பதத்தின் அளவை அதிகரித்து புயலின் தீவிரத்தை அதிகரிக்கிறது என தெரிவித்துள்ளனர். எனினும் எதிர்காலத்தில் உருவாகும் அனைத்துப் புயல்களும் அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்று அர்த்தம் இல்லை. அதேவேளையில், வெப்பமான கால நிலையில் அதிக மழைப்பொழிவு மற்றும் பலமான காற்றுடன் கூடிய சக்தி வாய்ந்த புயல்கள் உருவாகும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

---

'மனிதன்' என்பது ஓர் அரசியல் மிருகம், வெறும் கூட்டமான மிருகமல்ல. ஆனால், சமூகத்தின் மத்தியில் மட்டுமே தன்னைத்தானே தனிப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு விலங்கு.

–கார்ல் மார்க்ஸ்

**முன்பக்கத்தொடர்ச்சி...**

காரணமாக அன்று டி.எஸ்.சேனநாயக்கவின் மகன் டட்லி சேனநாயக்க தலைமையில் இருந்த பெரு முதலாளித்துவ சார்பு ஐ.தே.க. அரசு கவிழ்ந்தது.

இருந்த போதிலும், அந்தப் போராட்டத்தை வழிநடத்திய இடதுசாரிக் கட்சிகளிடம் மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கான திட்டங்கள் ஏதும் இருக்காததால், தொழிலாளி வர்க்கம் தான் பெற்ற வெற்றியின் பலாபலன்களை அனுபவிக்க முடியவில்லை. அதனால் ஆட்களை மாற்றிவிட்டு முன்னைய பிற்போக்கு ஆட்சியே தொடர்ந்தது.

ஆனால், இலங்கையின் தேசிய முதலாளித்துவம் சார்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சியொன்றை உருவாக்கியிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, ஹர்த்தால் போராட்டத்தினால் கிடைத்த பலாபலன்களை 1956இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அறுவடை செய்து கொண்டார்.

அந்தத் தேர்தலில் ஐ.தே.கவை தோற்கடித்து அமோக வெற்றி பெற்ற பண்டாரநாயக்க, தனது வெற்றிக்குப் பங்களித்த தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம் என்பனவற்றுக்கு ச் சாதகமான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருந்தது.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் பல நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் சட்டங்களை இயற்றினார். அவற்றில் ஒன்றான அவர்களது தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையை அங்கீகரித்தார். தொழிலாளர்களின் சர்வதேச தினமான மே தினத்துக்கு சம்பளத்துடன் விடுமுறை வழங்கினார்.

அதே நேரத்தில், ஒரு முதலாளித்துவவாதி என்ற வகையில் தொழிற்சங்கத்துறையில் இடதுசாரிகளுக்கு இருந்த ஏகபோக நிலைமையை திட்டமிட்ட வகையில் உடைப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்.

அதுவரை காலமும் ஒரு தொழிற்துறையில் வாக்கெடுப்பு மூலம் பெரும்பான்மையான தொழிலாளர்களினால் ஆதரிக்கப்படும் தொழிற்சங்கம்தான் சட்டபூர்வ அந்தஸ்துப் பெறலாம் என்ற நிலைமையை மாற்றி, 7 பேரின் ஆதரவு இருந்தால் எவரும் தொழிற்சங்கம் அமைக்கலாம் என்ற நிலைமையை பண்டாரநாயக்க ஏற்படுத்தினார்.

பண்டாரநாயக்கவின் நோக்கம் தனது சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் தொழிற்சங்கத் துறையில் கால் வைப்பதற்கான நிலைமையை உருவாக்குவதாக இருந்தபோதிலும், அது பிற்காலத்தில் ஐ.தே.க. மற்றும் தமிழரசுக் கட்சி போன்ற பிற்போக்குவாதக் கட்சிகளும் தொழிற்சங்க இயக்கத்தில் கால்வைக்க வழிவகுத்த எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது.

பண்டாரநாயக்கவின் நடவடிக்கைகளின் இன்னொரு விளைவு தொழிற்சங்கத்தை இனவாத அடிப்படையில் பிளவுபடுத்தியதாகும். அவர் கொண்டு வந்த தனிச்சிங்களம் சட்டத்தால் தொழிற்சங்கங்கள் மொழிவாரி அடிப்படையில் பிளவுண்டன. அவரது அந்தச் செயற்பாட்டைப் பயன்படுத்தி, தமிழரசுக் கட்சி மொழிவழித் தொழிற்சங்கங்களை உருவாக்குவதில் வெற்றி கண்டது. இது இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவாகும்.

அது மட்டுமின்றி, 1965இல் டட்லி சேனநாயக்கவை பிரதமராகக் கொண்டு, ஐ.தே.க. தலைமையில் அமைத்த ஏழுகட்சி கூட்டணி அரசாங்கம் தமிழ்மொழிக்கு அந்தஸ்து வழங்கும் சிறப்பு மசோதா ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தபோது, எதிர்க்கட்சிக் கூட்டணியிலிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சோவியத் சார்பு) என்பன அதற்கு எதிராக பொது வேலைநிறுத்தம் ஒன்றில் இறங்கின. இந்த இனவாத அடிப்படையிலான வேலைநிறுத்தம் காரணமாக, வரலாற்றில் முதல் தடவையாக சிறுபான்மை இனங்களுக்கு இடதுசாரி கட்சிகள் மீதிருந்த நம்பிக்கை அவநம்பிக்கையாக மாறியது.

இந்த நிலைமைகளின் தொடர்ச்சியாக, பின்னர் இலங்கையில் சிங்கள – தமிழ் இனவாதிகளினால் உள்நாட்டு யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்பட்ட போது, அதைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் தொழிலாளி வர்க்கத்துக்கு இல்லாமல் போயிற்று.

அது மாத்திரமின்றி, இடதுசாரிப் போர்வையில் இருந்த சிங்கள தேசியவாத இயக்கமான ஜே.வி.பி., இந்தச் சூழலைப் பயன்படுத்தி பாரம்பரிய இடதுசாரிகளின் தலைமையில் இருந்த தொழிற்சங்க அமைப்பு முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. இது இலங்கையின் தொழிற்சங்க இயக்கத்தின் புரட்சிகரப் பாரம்பரியத்துக்கு ஏற்பட்ட மற்றுமொரு பாரிய பின்னடைவாகும்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு பிரதானமாக தொழிற்சங்க இயக்கத்தையும், ஏனைய உழைக்கும் மக்களையுமே பயன்படுத்திக் கொண்டது என்பது அனைவரும் அறிந்த விடயம்.

ஆனால் ஏறப் பயன்பட்ட ஏணியை உதைத்துத் தள்ளுவது போல, தன்னை அரியாசனம் ஏற்றப் பயன்பட்ட தொழிலாளி வர்க்கத்தையும், ஏனைய உழைக்கும் மக்களையும் இன்று ஜே.வி.பி. தலைமையிலான அரசாங்கம் கைகழுவி விட்டது மட்டுமின்றி, அவர்களது கோரிக்கைகளை ஊதாசீனப்படுத்தி, அவர்கள் மீது அடக்குமுறைகளையும் ஏவி வருகின்றது.

இதை சற்றும் எதிர்பார்க்காத தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு எவரும் இல்லாததால், குழம்பிப்போய் இருக்கின்றனர்.

இந்தச் சூழலை இப்படியே விட்டுவிட முடியாது. இடதுசாரி இயக்கத்திலுள்ள உண்மையான புரட்சிகர சக்திகள் இந்த நிலைமையை பாரதூரமாகக் கவனத்தில் எடுத்து செயல்படுவது அவசியமானது.

அவர்கள் தற்போதைய சூழலில் செய்யக்கூடியது எல்லாம். பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் செய்தது போல, தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடக்குமுறைகளில் இருந்து தொழிலாளி வர்க்கத்தை மீட்கும் பொருட்டு, மீண்டும் பலமான ஒரு புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டியெழுப்புவதுதான்.

இந்தப் பணி செய்யப்பட முடியாத இலக்கு அல்ல. புரட்சிகர சக்திகள் மனம் வைத்தால் அவர்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. இது வரலாறு சொல்லும் பாடம்.

---

கஞ்சன் என்பவன் வெறுமனே ஒரு பைத்தியம் பிடித்த முதலாளியாக இருக்கும்போது, முதலாளி என்பவன் ஒரு பகுத்தறிவுள்ள கஞ்சன் ஆவான்.

**–கார்ல் மார்க்ஸ்**

# சீன நாணயத்தைப் பயன்படுத்துவது இலங்கைக்குப் பயனளிக்கும்!

இலங்கை சீன நாணயமான யுவானை (ரென்மின்பி – RENMINBI – RMB) பயன்படுத்துவது இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பலப்படுத்தவும், அந்நியச் செலாவணிப் பிரச்சினையைக் குறைக்கவும் உதவும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் ஸி சென்ஹொங் (Qi Zhenhong) தெரிவித்திருக்கிறார்.

இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெற்ற சீன நாணயத்தை சர்வதேசமயப்படுத்தும் நிகழ்வில் பேசும்போதே சீனத் தூதுவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"சீன நாணயத்தின் பரந்த பயன்பாடு அந்நியச் செலாவணி இருப்பின் கட்டமைப்பை பன்முகப்படுத்தவும், மாற்று விகித அபாயத்தைக் குறைக்கவும், இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் நிதியுதவி என்பனவற்றில் மிகவும் நிலையான மற்றும் குறைந்த விலைத் தீர்வு வழிகளை வழங்கவும் உதவுகிறது. இதன் மூலம் உள்ளூர் நாணயத்தின் நிலைத்தன்மை மற்றும் மைக்ரோ பொருளாதார (Micro-Economy) மீள்தன்மை ஆகியவற்றை வலுப்படுத்த உதவுகிறது.

இது இலங்கையில் வர்த்தக வசதி, முதலீட்டு ஈர்ப்பு மற்றும் நிதி அமைப்பு நவீனமயமாக்கல் என்பனவற்றில் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தும்.

சீன நாணயத்தின் உலகளாவிய ஏற்றுக் கொள்ளலின் முன்னேற்றத்தின்படி, 2025ஆம் ஆண்டின் முதல் பாதியில் வெளிநாடுகளில் சீன நாணயத்தின் கொடுப்பனவுகள் மொத்தம் 35 றில்லியன் (Trillion) யுவானாக (சுமார் 4.9 றில்லியன் டொலர்கள்) இருந்தது. வருடந்தோறும் இது 14 சதவீதப்படி அதிகரித்து வந்துள்ளது.

80 இற்கும் மேற்பட்ட நாடுகளும் பிராந்தியங்களும் இப்போது தங்களின் அந்நியச் செலாவணி இருப்புகளை சீன நாணயத்தில் வைத்திருக்கின்றன. இதில் ஹொங்கொங் முக்கியமான கடல்சார் மையமாக வளர்ந்துள்ளது. இலண்டன், சிங்கப்பூர், துபாய் ஆகிய இடங்களில் நிரப்பு சந்தைகள் உள்ளன.



முக்கியமான கடல்சார் சந்தைகளில் யுவானின் வைப்புத் தொகை சுமார் 1.6 றில்லியன்கள் ஆகும். யுவான் மற்றும் பண்டா (Panda) பத்திரங்களின் நிலுவைத் தொகை சுமார் 2 றில்லியன்கள் ஆகும்.

சீனாவின் உலகளாவிய தீர்வுத்தளமான CPS 189 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் 5,000 இற்கும் மேற்பட்ட அனுமதி பெற்ற வங்கி நிறுவனங்களை உள்ளடக்கிய 1,729 பங்கேற்பாளர்களைக் கொண்டுள்ளது.

தற்போது 33 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் யுவான் நாணயத் தீர்வு வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், சீன நாணயமானது சர்வதேச நாணய நிதியத்தின் சிறப்பு உரிமைகள் இருப்பில் 12.28 சதவீதமாகும். இது அமெரிக்க டொலர், யூரோ என்பனவற்றுக்கு அடுத்ததாக மூன்றாவது இடத்தில் உள்ளது.

சீன மக்கள் வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் நியுசிலாந்து, தென் கொரியா, இந்தோனேசியா, பிரேசில், சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் மத்திய வங்கிகள் உள்ளிட்ட கூட்டாளிகளுடன் 32 இருதரப்பு நாணய பரிமாற்ற ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மொத்த தொகை 4.5 றில்லியன் யுவான்கள் ஆகும்.

சீன நாணயத்தின் பயன்பாடு நடைமுறைகளை எளிதாக்குகின்றது, பரிவர்த்தனைச் செலவுகளைக் குறைக்கிறது, நிறுவனங்களுக்கு ஏற்படும் அபாயங்களிலிருந்து திறம்படப் பாதுகாக்க உதவுகின்றது. உலக நிதியமைப்பை மேலும் பன்முகப்படுத்தவும், நிலையானதாக்கவும், வளரும் நாடுகளுக்கு சமமான பங்கேற்பு மற்றும் வாய்ப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், அதிக இடத்தை வளங்குவதும் இதன் நோக்கமாகும்.

80 ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதிலிருந்து சர்வதேச நாணய அமைப்பு அமெரிக்க டொலரால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வருகின்றது. முதலில் பிரெட்டன் வூட்ஸ் நிலையான பரிமாற்ற விகித முறையின் கீழும், பின்னர் ஜமைக்கா ஒப்பந்தத்தின் மிதக்கும் விகித ஆட்சியின் கீழும் இருந்தது.

டொலரை மையப்படுத்திய அமைப்பு, அதன் கட்டமைப்பு முரண்பாடுகள், பணப்புழக்க வழங்கலில் ஏற்றத்தாழ்வுகள், வளரும் நாடுகளின் நலன்களை ஓரங்கட்டுதல் என்பன தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஒரு பெரிய பொருளாதாரம் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த கொள்கையை இறுக்கியவுடன் மூலதனக் குறைப்பு ஏற்படுகின்றது. அத்துடன் இதனால் வளரும் நாடுகள் மாற்று விகித அதிர்ச்சிகள், அதிகரித்து வரும் நிதிச் செலவுகள், வளர்ச்சிப் பின்னடைவு என்பனவற்றால் பாதிக்கப்படலாம்.

சர்வதேச நாணய கட்டமைப்பை சமமானதாகவும், நிலையானதாகவும் மாற்ற சீர்திருத்தம் செய்ய வேண்டியது ஒரு பொதுவான இலக்காக மாறியுள்ளது.

இந்த நிலைமையில், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார மற்றும் வர்த்தக நாடான சீனா, சர்வதேச நாணய அமைப்பின் சீர்திருத்தத்தில் தீவிரமாகப் பங்கேற்று, சீன நாணயத்தின் சர்வதேசமயமாக்கலை ஊக்குவித்து வருகின்றது.

விரிவான ஆலோசனை, கூட்டுப் பங்களிப்பு, பகிரப்பட்ட நன்மைகள் என்பனவற்றின் கொள்கைகளை நிலைநிறுத்த அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக உள்ளோம். தொடர்ச்சியான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு என்பன சீன நாணயத்தின் சர்வதேசமயமாக்கலை ஒரு புதிய நிலைமைக்குக் கொண்டு செல்லும் என நாம் நம்புகிறோம்".

இவ்வாறு சீனத் தூதுவர் ஸி சென்ஹொங் தனது உரையின் போது குறிப்பிட்டார்.